www.penakural.com மலர்: 02 இதழ்: 06 ஏப்ரல் 2024 விலை: ₹ 20/-

# பேனா குரல்

PENA KURAL

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM / 2022 / 85375





## நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை வீழ்த்திக் காட்டுவோம்: ராகுல் காந்தி

## பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் முகமாக மாறிவிட்டார்; காங்கிரஸ் உறுப்பினர் பிராட் ஷெர்மன்

# Subzero Cool Tech

## AC REPAIR SERVICE & RENT

**AT YOUR DOOR STEP**

- AC REPAIR
- INSTALLATION
- MAINTENANCE
- AMC SERVICE

**We Repair all Brands**




**CONTACT US**

Address:
3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR,
Opp to Bajanai Kovil, Mettukuppam,
Chennai - 600097.

SARAVNAN
9884555002
Email: saravnan1290@gmail.com

# பேனா குரல்

**PENA KURAL**

தமிழ் மாத இதழ்

RNI No.: TNTAM/2022/85375

ஆண்டு: 02 இதழ்: 06 ஏப்ரல் 2024

விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர்:
**நா வீ சிவசங்கர்**

ஆசிரியர் : **ராதிகா.S**, B.E.,

துணை ஆசிரியர்கள்:
**துரை. சந்துரு, ந.மதிவாணன், M.சந்திரசேகர், K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி**

தலைமை நிருபர்கள்:
**B.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், ம.திலிப் குமார், பா.சரவணன், K.மாரிதுரை, A.தங்கராஜ்**

நிருபர்கள்:
**Ba.சரவணன், தமிழ்மணி, கா.கலைமணி, தி.பாமா, அன்பு மணி, s.பிரகாசம், இளைய தர்ஷினி, பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி**

புகைப்பட நிருபர்கள்:
**வா.கவியரசன், கா.மிதுன் சாய்**

சட்ட ஆலோசகர்கள்:
**M. குணசீலன்**, B.Com.,M.L.,
**G. நாகராஜ்**, B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு:
*Tamilni Printz & Graphics* - 8754582123

நிர்வாக அலுவலகம்:
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு:
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com



* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.*


**தலையங்கம்**

*ஆசிரியர் குரல்*

# புலம்பெயர் வாக்காளர்கள் வாக்களிப்பது சாத்தியமா?

இந்தியாவின் நாடாளுமன்றத் தேர்தல் முறையில் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளும் 65% வாக்காளர்களில் 30% முதல் 35% வரை வாக்குகள் பெறுபவர்கள் பல தொகுதிகளில் வெற்றி பெற்ற வேட்பாளர்களாக அறிவிக்கப்படு கிறார்கள். இந்த ஜனநாயக முரண், மக்கள் அதிக அளவில் வாக்களிக்க முன்வருவதன் மூலம்தான் மாற்றப் படும்.

அதைவிட வேதனை அளிக்கும் செய்தி என்னவென்றால், 18 வயதைக் கடந்த முதல்முறை வாக்காளர்கள் தேர்தலில் பங்கு பெறுவதில் ஆர்வம் காட்டாமல் இருப்பது. இந்தியா வளர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதற்கு அதிகரித்துவரும் இந்தியாவின் இளைஞர்களின் மக்கள்தொகை ஒரு காரணம். அப்படியிருக்கும் போது, அவர்கள் ஜனநாயக நடை முறையில் ஆர்வம் காட்டாமல் இருப்பதை முரண் என்று கூறுவதா அல்லது நமது அரசியல் கட்சிகளின் மீதான நம்பகத்தன்மையின்மை காரணமா?

பதினெட்டு/பத்தொன்பது வயதைக் கடந்த முதல்முறை வாக்காளர்களில், 40% க்கும் குறைவானவர்கள் மட்டுமே வாக்களிக்கத் தங்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள். முதல்முறை வாக்களிக்கிறோம் என்கிற ஆர்வமும், அதனால் கிடைக்கும் அங்கீகாரமும் அவர்களில் பெரும்பாலானோரை ஈர்க்காமல் இருப்பதன் காரணம் புரியவில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய தேர்தல் ஆணையம் சில புள்ளிவிவரங்களை வெளியிட்டது. அதன்படி 18/19 வயது பிரிவினரான புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை 1.8 கோடி. இந்த வயதுப் பிரிவினரின் உத்தேச எண்ணிக்கை சுமார் 4.9 கோடி என்னும் நிலையில், வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் புதிய வாக்காளர்கள் வெறும் 38% மட்டுமே; இந்த விகிதம் சற்று அதிகரிக்கக் கூடும்.

இந்தியாவிலேயே அதிக அளவில் இளைய தலைமுறை புதிய வாக்காளர்கள் இணைந் திருப்பது தெலங்கானா மாநிலத்தில். 12 லட்சம் பேரில் 8 லட்சம் பேர், அதாவது 66.7% பேர் ஆர்வத்துடன் தங்களை வாக்காளர் பட்டியலில் இணைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஜம்மு-காஷ்மீர், ஹிமாசல் பிரதேசத்தில் 18/19 வயது பிரிவினர் 60% க்கும் அதிகமானோர் இணைந்திருக்கிறார்கள்.

புள்ளிவிவரம் இன்னும் சில தகவல்களைத் தெரிவிக்கிறது. பெரிய மாநிலங்களான உத்தர பிரதேசம், மகாராஷ்டிரம், பிகார் ஆகிய மூன்றிலும் 25%-க்கும் குறைவாகவும், மேற்கு வங்கம், தமிழகத்தில் 50% க்கும் குறை வாகவும் 18/19 வயதுப் பிரிவினர் இணைந்தனர். இத்தனைக்கும் மகாராஷ்டிரம், மேற்கு வங்கம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களிலும் தொடர்ந்து ஒவ்வொரு தேர்தலிலும் வாக்காளர்களை ஈர்க்கும் விதத்தில், விழிப்புணர்வுப் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றன.

கல்விக்காகவோ, செயல்முறைப் பயிற்சிக்காகவோ, வேலைக்காகவோ வெளியூரில் தங்கி இருக்கும் இளைஞர்கள் தங்களை இணைத்துக்கொள்ள முடியாமல் இருக்கக்கூடும். வாக்காளர் பட்டியலில் இணைவதற்காகவும், வாக்களிப்பதற்காகவும் அவரவர் ஊருக்குப் பயணிப்பது இயலாது என்பதால் தவிர்த்திருக்கலாம்.

– **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்

# ஒரு வாக்காளரும் விடுபடக் கூடாது என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கமாகும்:

## தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹு



ஒரு வாக்காளரும் விடுபடக் கூடாது என்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கமாகும் என்றும் இதற்காக பல புதிய நடைமுறைகளை ஆணையம் மேற்கொண்டுள்ளது என்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹு தெரிவித்துள்ளார்.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் தயாரித்த நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல் 2024 கையேடு வெளியீட்டு விழாவில் இந்தக் கையேட்டினை வெளியிட்டுப் பேசிய அவர், தபால் வாக்குகள் பதிவு செய்வதில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் தாங்கள் பயிற்சி பெறும் இடத்திலேயே வாக்களிக்கும் நடைமுறை கொண்டுவரப்பட்டுள்ளது என்றும் 85 வயதைக் கடந்தவர்களும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களும், தபால் வாக்கு செலுத்த அனுமதிக்கப்பட்டிருப்பதையடுத்து சுமார் நான்கு லட்சம் பேர் அதற்கான படிவத்தை ஆர்வத்துடன் பூர்த்தி செய்து அளித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

ராணுவத்தில் பணியாற்றுவோர் தபால் வாக்கு அளிப்பதில் இருந்த சிரமங்கள் நீக்கப்பட்டு தற்போது இடிபிபிஎஸ் எனும் மின்னணு மூலம் பரிமாற்றம் செய்யும் வாக்களிப்பு முறை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். ரயில்வே துறை மற்றும் ஊடகங்களில் பணியாற்றுவோரும், தபால் வாக்கு முறையை பயன்படுத்தலாம் என்ற அளவிற்கு நடைமுறையில் மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன என்று குறிப்பிட்ட தலைமைத் தேர்தல் அதிகாரி ஒரு வாக்காளரும்



விடுபடக் கூடாது என்ற தேர்தல் ஆணையத்தின் நோக்கமே இதற்குக் காரணம் என்றார்.

மக்கள் ஓரிடத்தில் கூடி ஜனநாயகக் கடமையாற்றும் இடமாக வாக்குச் சாவடிகள் இருப்பதால் இங்கு நிழல் தரும் பந்தல்கள், குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதாகவும் மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலி, உதவியாளர் போன்ற வசதிகள் செய்து தரப்படுவதாகவும் திரு சத்யபிரத சாஹூ தெரிவித்தார்.

தேர்தலில் வாக்களித்து தங்களின் உரிமைகளை வெளிப்படுத்த மக்கள் ஆர்வமாக உள்ளனர் என்பதால் எல்லா ஊடகங்களிலிருந்தும் தகவல்களைத் திரட்டி இவற்றில் எது சரியானது என்பதை அறிந்து யாருக்கு வாக்களிப்பது என்பதை முடிவு செய்யும் திறனை இந்திய வாக்காளர்கள் பெற்றுள்ளனர் என்று கூறிய அவர், இத்தகைய தகவல்களை மேலும் கூடுதலாக அளிக்க இந்தக் கையேடு உதவும் என்றும் இதனை ஊடகங்கள் மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்றுள்ள தேர்தல்களைக் காணும் போது சராசரியாக 73 முதல் 74 சதவீதம் வரை வாக்குப்பதிவு நடைபெறுகிறது என்று குறிப்பிட்ட அவர், இது வாக்காளர்களின் அதிகரித்து வரும் ஆர்வத்தை நிரூபிப்பதாக உள்ளது என்றார்.

பின்னர், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த தலைமைத் தேர்தல் அதிகாரி, பணபலத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வாகன சோதனைகளில் பாகுபாடு காட்டப்படுவதில்லை என்றும், ஒரு சட்டப்பேரவைத் தொகுதிக்கு 7 கண்காணிப்பு வாகன அணிகள் வீதம் செயல்பட்டு வருவதாகவும் கூறினார். தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பிறகும் சமூக ஊடகங்கள், யூடியூப் போன்றவற்றில் பிரச்சாரம் செய்யப்படுவது பற்றிய கேள்விக்கு பதில் அளித்த அவர், பொது இடங்களில் மக்களைத் திரட்டி வாக்கு சேகரிப்பதற்கு அனுமதியில்லை என்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது என்பது தனி நபர் தெரிவு என்றும் கூறினார்.

வெறுப்புப் பேச்சு மீதான நடவடிக்கை பற்றிய கேள்விக்கு பதில் அளித்த அவர், இது தேர்தல் நடத்தை விதி சம்பந்தப்பட்டது என்பதால், தேர்தல் ஆணையம் சட்டப்படியான நடவடிக்கை எடுக்க இயலாது என்றாலும், இந்திய தண்டனைச் சட்டம், மக்கள் பிரதிநி-தித்துவச் சட்டம் ஆகியவற்றின் கீழ் காவல் துறை மூலம் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றார்.

முன்னதாக, சென்னை பத்திரிகை தகவல் அலுவலக கூடுதல் தலைமை இயக்குநர் திரு எம். அண்ணாதுரை தலைமையில் நடைபெற்ற விழாவில், பொதுத் தேர்தல் 2024 கையேட்டினை தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூ வெளியிட்டார். இந்தக் கையேடு தயாரிப்பில் ஈடுபட்ட அலுவலர்கள் மற்றும் ஊழியர்களை அவர் கௌரவித்தார். விழா நிறைவில் மத்திய மக்கள் தொடர்பு அலுவலக இயக்குநர் திருமதி லீலா மீனாட்சி நன்றி கூறினார்.

சென்னை தூர்தர்ஷன் அரங்கில் நடைபெற்ற இந்த விழாவில், டிடிதமிழ், சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம், மத்திய மக்கள் தொடர்பு அலுவலகம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

– ம.திலிப் குமார்

# சமத்துவம் என்ற கண்ணோட்டத்தில் இந்தப் பூமியில் உள்ள எவரிடமிருந்தும், எந்த உபதேசமும் இந்தியாவுக்குத் தேவையில்லை:

## குடியரசுத் துணைத்தலைவர்

சமத்துவத்தின் மீது நாம் எப்போதும் நம்பிக்கை கொண்டிருப்பதால், சமத்துவம் குறித்து இந்தப் பூமியில் உள்ள எவரிடமிருந்தும் போதனைகள் எதுவும் இந்தியாவுக்குத் தேவையில்லை என்று குடியரசுத் துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் உறுதிபடக் கூறியுள்ளார். நாடுகளை உள்நோக்கிப் பார்க்குமாறு கேட்டுக்கொண்ட அவர், "சில நாடுகள் இன்னும் ஒரு பெண் அதிபரைக் கொண்டிருக்காத நிலையில், இந்தியா ஒரு பெண் குடியரசுத் தலைவரைக் கொண்டிருப்பதாக தெரிவித்தார். இங்கிலாந்துக்கு முன்பாக பெண் பிரதமரைக் கொண்டிருந்த நாடு இந்தியா என்று அவர் சுட்டிக்காட்டினார். 200 ஆண்டுகளை நிறைவு செய்த மற்ற பல நாடுகளின் உச்ச நீதிமன்றத்தில் ஒரு பெண் நீதிபதி கூட இல்லை என்று தெரிவித்த அவர், இந்தியாவில் பெண் நீதிபதிகள் உண்டு என்பதை சமூக ஊடகத் தளத்தில் பதிவிட்டுள்ள அவர் தெரிவித்துள்ளார்.

குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து தவறான கதைகள் மற்றும் தவறான தகவல்கள் பரப்பப்படுவதற்கு எதிராக எச்சரித்துள்ள திரு தன்கர், குடியுரிமை திருத்தச் சட்டம் எந்தவொரு இந்திய குடிமகனின் குடியுரிமையைப் பறிக்கவோ அல்லது முன்பு போல இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதிலிருந்து யாரையும் விலக்கவோ முயற்சிக்கவில்லை என்று அவர் கூறியுள்ளார். அண்டை நாடுகளில் உள்ள சிறுபான்மையினருக்கு இந்திய குடியுரிமையைப் பெற சிஏஏ உதவுகிறது என்று குறிப்பிட்டுள்ள குடியரசுத் துணைத் தலைவர், "மத அர்ப்பணிப்பு காரணமாக நம் அண்டை நாடுகளில் துன்புறுத்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் இந்த நிவாரணம், எவ்வாறு பாரபட்சமாக இருக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பியுள்ளார்.



2014 டிசம்பர் 31 அல்லது அதற்கு முன்னர் இந்தியாவுக்கு வந்தவர்களுக்கு குடியுரிமை திருத்தச் சட்டம் பொருந்தும் என்று குறிப்பிட்டுள்ள அவர், அது உள்நாட்டிற்கு வருவதற்கான அழைப்பு அல்ல என்று தெரிவித்துள்ளார். "இந்த விளக்கங்களை நாம் நடுநிலையாக்க வேண்டும். இவை அறியாமையால் அல்ல, நம் நாட்டை வீழ்த்துவதற்கான ஒரு உத்தியிலிருந்து வெளிப்படுகின்றன" என்று அவர் எச்சரித்துள்ளார்.

முசோரியில் உள்ள லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியில் 2023 பேட்ச் ஐஏஎஸ் அதிகாரி பயிற்சியாளர்களின் தொழில்முறை படிப்பின் முதல் கட்டத்தின் முடிவில் உரையாற்றிய அவர், நமது புகழ்பெற்ற மற்றும் வலுவான அரசியலமைப்பு அமைப்புகளை களங்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட உண்மைக்கு புறம்பான தேச விரோத கதைகளின் இதுபோன்ற திட்டமிடலை நிராகரிக்குமாறு இளம் மனங்களுக்கு அழைப்பு விடுத்தார்.

சமீப காலமாக நிர்வாகம் சிறப்பான திருப்பத்தை அடைந்துள்ளது என்று கூறிய குடியரசுத் துணைத் தலைவர், சலுகை பெற்ற வம்சாவளியினர் இப்போது புறவழிச் சந்துகளில்

சிக்கித் தவிப்பதாகக் கூறினார். "சட்டத்தின்முன் அனைவரும் சமம் என்பது முன்மாதிரியான முறையில் திணிக்கப்படுவதாலும், ஊழல் இனி ஒரு வர்த்தகப் பொருளாக இல்லாததாலும் ஜனநாயக விழுமியங்களும் சாரமும் ஆழமடைந்து வருகின்றன. முன்னதாக ஒப்பந்தம், ஆட்சேர்ப்பு, வாய்ப்பு ஆகிய வற்றைக் கடந்து செல்வதற்கான ஒரே வழிமுறை இதுதான், "என்று அவர் மேலும் கூறினார்.

சில சலுகை பெற்ற வம்சாவளியினர் முன்னர் சட்ட நடைமுறைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டவர்கள் என்றும், சட்டம் அவர்களை அடைய முடியாது என்றும் நினைத்ததாகக் கூறிய குடியரசு துணைத் தலைவர், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது நீண்ட காலமாக நம்மிடமிருந்து நழுவிச் சென்றதும், நிர்வாக நரம்புகளில் ரத்தம் போல் ஓடிக் கொண்டிருந்த ஊழலும் இப்போது கடந்த காலப் பிரச்சினைகளாகிவிட்டன என்று அவர் இளம் அதிகாரிகளிடம் கூறினார்.

நமது அதிகார வழித்தடங்கள் ஊழல் சக்திகளிடமிருந்து தூய்மைப்படுத்தப்பட் டுள்ளன, அவர்கள் முடிவெடுப்பதை சட்டபூர்வமாக பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று பாராட்டிய குடியரசுத் துணைத் தலைவர், நாடு விரக்தியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார். இந்தியா நம்பிக்கை மற்றும் சாத்தியக்கூறுகளின் பூமியாக மாறியுள்ளது. நாடு முழுவதும் உற்சாகமான மனநிலை நிலவுவதாகக் கூறிய குடியரசு துணைத் தலைவர், இந்தியா இனி ஒரு ஆற்றலைக் கொண்ட நாடாக நகர்ந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

உலகளவில் நமது தோற்றம் அதிகரித்து வருவதை சுட்டிக்காட்டிய திரு. தன்கர், விநியோகச் சங்கிலியைக் காப்பாற்றவோ அல்லது கடற்கொள்ளையர்களால் பாதிக்கப் பட்டவர்களை மீட்கவோ நமது கடற்படை செயல்படாத ஒரு வாரம் கூட இல்லை என்றார். அவர்களின் சாதனை குறித்து ஒவ்வொரு இந்தியரும் பெருமிதம் கொள்வார்கள் என்று அவர் மேலும் கூறினார்.

நீண்டகாலமாக ஆட்சியில் இருந்தவர்கள், அதிகாரப் பதவிகளை வகித்தவர்கள், தேசத்தின் வளர்ச்சிக்குப் பங்காற்றும் வாய்ப்பைப் பெற்றவர்கள், அதிகாரத்தை இழந்ததால் நாட்டின் வளர்ச்சிப் பாதையில் ஆர்வம் இல்லாதவர்கள் ஆகியோரிடமிருந்து நமது ஜனநாயக ஆட்சி முறைக்கு மிகப் பெரிய சவால் எழுகிறது என்று அவர் கூறினார்.

மக்களின் அறியாமையைப் பணமாக்க ஒரு தவறான அறிக்கையை வெளியிடுவதைப்போல ஜனநாயகத்திற்கு சவாலானது எதுவும் இருக்க முடியாது என்று எச்சரித்த குடியரசு துணைத்தலைவர், அத்தகைய நபர்களை அம்பலப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். "அதிகார பதவிகளை வகித்த சில நபர்கள், அதிகாரம் அல்லது அதிகாரத்தை விட்டு வெளியேறியவுடன், நாட்டின் வளர்ச்சிப் பாதையில் மோசமான பசியைக் கொண்டுள்ளனர்," என்று அவர் மேலும் கூறினார்.

குடியரசுத் துணைத் தலைவர் தனது உரையில், ஐ.ஏ.எஸ். பயிற்சி அதிகாரிகளிடம் மக்கள் அவர்களை முன்மாதிரியாகப் பார்க்கிறார்கள் என்று கூறினார். "இளம் உள்ளங்களை பின்பற்றவும், ஊக்குவிக்கவும், எந்தவொரு திறனிலும் பெரியவர்களின் பாராட்டைப் பெறவும் மதிப்புள்ள செயல்களால் நீங்கள் முன்மாதிரியாக இருக்க வேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்

நமது நாகரிக விழுமியங்களை வழிகாட்டும் கொள்கையாக விவரித்த குடியரசுத் துணைத் தலைவர், "சேவை உணர்வு மற்றும் கருணையுடன் இணைந்து பணியாற்றுங்கள்" என்று இளம் அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

உத்தராகண்ட் ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் குர்மித் சிங் , லால் பகதூர் சாஸ்திரி தேசிய நிர்வாக அகாடமியின் இயக்குநர் திரு. ஸ்ரீராம் தரணிகாந்தி மற்றும் பிரமுகர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

– B.நவின்குமார்

# “கச்சத்தீவு குறித்து ஸ்டாலினுக்கு 21 முறை பதில் அளித்துள்ளேன்”:

## வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர்




“முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நான் 21 முறை கச்சத்தீவு தொடர்பாக பதில் அளித்துள்ளேன். இது திடீரென எழுந்த பிரச்சினை அல்ல.” என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு தொடர்பான 1974 ஒப்பந்தம் குறித்து தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை பெற்ற ஆர்டிஐ தகவலுக்கு பிறகு இந்த விவகாரம் மீண்டும் சர்ச்சையாகி வருகிறது. பிரதமர் மோடி இந்த விவகாரத்தில் திமுகவின் இரட்டை வேடம் அம்பலமாகிவிட்டது என்று கூறி விமர்சித்த நிலையில், வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த விவகாரம் தொடர்பாக பேட்டியளித்தார்.

அப்போது அவர் பேசுகையில், "கச்சத்தீவு பிரச்சினை தொடர்பாக பொதுமக்கள் தெரிந்து கொள்வது முக்கியம். இந்த பிரச்சினை நீண்ட காலமாக பொதுமக்களின் பார்வையில் இருந்து மறைக்கப்பட்டுள்ளது. இந்திய மீனவர்கள் உரிமை குறித்து நாடாளுமன்றத்தில் 1974-ல் விளக்கம் தரப்பட்டுள்ளது. மேலும், அப்போது போடப்பட்ட இந்தியா - இலங்கை ஒப்பந்தப்படி கச்சத்தீவில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய உரிமைகள் நிலைநாட்டப்பட்டன.

இந்த ஒப்பந்தத்தின்போது முன்னாள் வெளியுறவு அமைச்சர் ஸ்வரன் சிங் 1974ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், "பாக் ஜலசந்தியில் கடல் எல்லையை வரையறுக்கும் இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் நியாயமானதாகவும், சமமானதாகவும் கருதப்படும் என்று நான் நம்புகிறேன். அதே சமயம், இந்த ஒப்பந்தத்தின் மூலம், கடந்த காலங்களில் இரு தரப்பினரும் அனுபவித்து வந்த மீன்பிடித்தல், புனித யாத்திரை மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் உரிமைகள் எதிர்காலத்துக்காக முழுமையாக பாதுகாக்கப்பட்டுள்ளன"' என்று தெரிவித்திருந்தார்.

ஆனால், இப்படி தெரிவித்த, இரண்டே ஆண்டுகளில் இந்திய மீனவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்திய மீனவர்கள் கச்சத்தீவு கடல் பகுதியில் மீன்பிடிப்பதை தடை செய்தனர். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே போடப்பட்ட ஒப்பந்தத்தில் கச்சத்தீவு இலங்கையின் பிரத்யேக பொருளாதாரமண்டலமாக அறிவிக்கப்பட்டதுடன், 'இலங்கையின் இந்த பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் இந்தியாவின் மீன்பிடி கப்பல்கள் மற்றும் மீனவர்கள் மீன்பிடிக்க கூடாது' என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தம் போடப்பட்டதன் விளைவு, கடந்த 20 ஆண்டுகளில் 6,184 இந்திய மீனவர்கள் இலங்கையால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் 1,175 இந்திய மீன்பிடி படகுகள் இலங்கையர்களால் இந்த 20 ஆண்டுகளில் கைப்பற்றப்பட்டுள்ளது.

**கச்சத்தீவு விவகாரம்**

கடந்த 5 ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் பல்வேறு கட்சிகளால் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகிறது. உண்மையில், தமிழக முதல்வர் எனக்கு பலமுறை கடிதம் எழுதியுள்ளார். தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நான் 21 முறை கச்சத்தீவு தொடர்பாக பதில் அளித்துள்ளேன். இது திடீரென எழுந்த பிரச்சினை அல்ல. பல ஆண்டுகளாக உள்ள இரு நாடுகளுக்கு இடையேயான ஒரு நேரடி பிரச்சினை.

கச்சத்தீவு தாரைவார்க்கப்பட்டபோது மாநில அரசிடம் கலந்தாலோசிக்கவில்லை என்று திமுக கூறுவதை ஏற்க முடியாது. இந்தியாவின் நிலப்பரப்பில் அப்போதைய மத்திய அரசும், பிரதமர்களும் காட்டிய அலட்சியமே இது மாதிரியான பிரச்சினைகள் தொடர்ந்து எழக் காரணம். முன்னாள் பிரதமர்கள் யாரும் கச்சத்தீவு பற்றி கவலைப்படவில்லை என்பதுதான் உண்மை.

மே 1961ல் அப்போதைய பிரதமர் ஜவஹர்லால் நேரு, "இந்தச் சிறிய தீவுக்கு நான் எந்த முக்கியத்துவமும் அளிக்கவில்லை, அதன் மீதான எங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க எனக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இது போன்ற விஷயங்கள் காலவரையின்றி நிலுவையில் இருப்பதும், மீண்டும் மீண்டும் நாடாளுமன்றத்தில் எழுப்பப்படுவதும் எனக்குப் பிடிக்கவில்லை." என்று ஒரு முறை பேசினார்.

இதிலிருந்து நேரு, இந்த குட்டித் தீவை ஒரு தொல்லையாகப் பார்த்தார் என்பது தெளிவாகிறது. மேலும், இந்த தீவை எவ்வளவு சீக்கிரம் தாரை வார்க்க முடியமா, அவ்வளவு நல்லது என்பதே நேருவின் பார்வையாக இருந்துள்ளது. இந்த பார்வை இந்திரா காந்திக்கும் தொடர்ந்தது.

பிரதமராக இருந்தபோது இந்திரா காந்தி, கச்சத்தீவை ஒரு சிறிய பாறை என்று அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் பேசியதாக கூறப்படுகிறது. இந்த புறக்கணிப்பு மனப்பான்மையே, கச்சத்தீவு தொடர்பான வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களுக்கான காங்கிரஸின் அணுகுமுறையாகும்" என்று ஜெய்சங்கர் தெரிவித்தார்.

- R.ஹரிகிருஷ்ணன்

# RS PRINTZY

**DTP**
**தமிழ்**
**&**
**ENGLISH**

**DESIGN**
- NEWSPAPER
- MAGAZINE
- NOVEL BOOKS
- BILL BOOKS
- LETTER PAD

- ALL TYPE ID CARDS
- V-CARDS
- PVC CARDS
- STICKERS

- LOGO DESIGN
- PAMPHLET
- FLEX / VINYL
- WEDDING CARDS
- POSTER

3/885, Pillaiyar Kovil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097.

**8754582123, 9962245338, 044-35906002**

Email: rsprintzy@gmail.com

# பள்ளி வாகனங்களுக்கான வழிகாட்டுதல் நெறிமுறை வெளியீடு

தனியார் பள்ளி வாகனங்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகளை தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

பள்ளி வாகனங்களில் மாணவிகள் பாலியல் தொல்லைகளுக்கு ஆளாவதாக வரும் புகாரையடுத்து, வழிகாட்டுதல் நெறிமுறைகள் குறித்து தனியார் பள்ளிகள் இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.

பள்ளி வாகனங்களுக்கான வழிகாட்டுதல் நெறிமுறைகள்

- அனைத்து வாகனங்களிலும் ஒரு பெண் உதவியாளர் நியமிக்கப்பட வேண்டும்.
- அனைத்து பள்ளி வாகனங்களிலும் ஜிபிஎஸ் மற்றும் சிசிடிவி கேமரா கட்டாயமாக பொருத்தப்பட வேண்டும்.
- சிசிடிவி கேமரா காட்சிகளை சேகரித்து காவல் துறையிடம் வழங்க வேண்டும்.
- ஒவ்வொரு பள்ளி வாகனத்திலும் வேக கட்டுப்பாட்டு கருவி பொறுத்தப்பட்டிருக்க வேண்டும்.
- ஓட்டுநர்களுக்குத் தினமும் சுவாச சோதனை செய்தபின் தான் வாகனத்தை இயக்க அனுமதிக்க வேண்டும்.
- பள்ளி வாகன ஓட்டுநர்கள், கனரக வாகன ஓட்டுநர் உரிமத்துடன் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவத்துடன் இருக்க வேண்டும்.
- போக்சோ சட்ட விதிகள் பற்றி ஓட்டுநர் மற்றும் உதவியாளருக்கு தெளிவாக விளக்கப்பட வேண்டும்.
- பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் குழந்தைகளை ஒப்படைத்த பின்னரே வாகனத்தை இயக்க வேண்டும்.

மேலும், ஓட்டுநர் மற்றும் உதவியாளர் மீது குற்ற நடவடிக்கை இல்லை என்ற காவல் துறை சான்று அவசியம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பள்ளி வாகனங்கள் தொடர்பான அனைத்து விவரங்களையும் ஏப்ரல் 5-க்குள் சமர்ப்பிக்க வேண்டும் என அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

– P.அசோக்குமார்




**25.03.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி / 'அரசு முதன்மை செயலாளர் திரு. சத்யபிரத சாகு, இ.ஆப., அவர்கள் மக்களவை பொதுத் தேர்தல் – 2024 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்களர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் "திறன் மிக்க வாக்காளராகுங்கள்" வாக்காளர் கையேட்டினை வெளியிட்டார்.**

# பொதுத் தேர்தல் 2024-ல் தவறான தகவல்களை முன்கூட்டியே முறியடிக்க 'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேட்டைத்' தேர்தல் ஆணையம் அறிமுகம் செய்துள்ளது




தவறான தகவல்கள் பரவுவதை எதிர்த்துப் போராடுவதற்கும், தேர்தல் நடைமுறையின் நேர்மையை நிலைநிறுத்துவதற்கும், இந்தியத் தேர்தல் ஆணையம் 2024 பொதுத் தேர்தல்களின் ஒரு பகுதியாக 'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேட்டைத்' அறிமுகம் செய்துள்ளது. தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார், தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஷ் குமார், திரு சுக்பீர் சிங் சந்து ஆகியோரால் புதுதில்லியில் உள்ள நிர்வசன் சதனில் 02.04.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் (https://mythvsreality.eci.gov.in/) மூலம் 'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேட்டை' பொதுமக்கள் அணுகலாம். தவறான தகவல்களிலிருந்து தேர்தல் நடைமுறையைப் பாதுகாப்பதற்கான தேர்தல் ஆணையத்தின் தற்போதைய முயற்சிகளில் 'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேடு' அறிமுகம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது.

2024 பொதுத் தேர்தலுக்கான அட்டவணை அறிவிப்பு குறித்த செய்தியாளர் கூட்டத்தில் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு ராஜீவ் குமார், பணபலம், ஆள்பலம் மற்றும் தேர்தல் நடத்தைவிதி மீறல் ஆகியவற்றுடன் தவறான தகவல்களும் தேர்தல் நேர்மைக்கு சவாலாக அடையாளம் காணப்பட்டுள்ளன என்றார். உலக அளவில் பல ஜனநாயக நாடுகளில் தவறான தகவல்கள் மற்றும் தவறான கற்பிதங்கள் அதிகரிக்கும் கவலையாக மாறி வருவதால், தேர்தல் ஆணையத்தின் இந்தப் புதுமையான மற்றும் செயலூக்கமான முயற்சி, தேர்தல் நடைமுறை முழுவதும் துல்லியமான மற்றும் சரிபார்க்கப்பட்ட தகவல்களை வாக்காளர்கள் அணுகுவதை உறுதி செய்வதற்கான ஒரு முயற்சியாகும்.

'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேடு' தேர்தல் காலத்தில் பரவும் கட்டுக்கதைகள் மற்றும் பொய்களை அகற்றுவதற்கு உண்மைத் தகவல்களின் விரிவான களஞ்சியமாக செயல்படுகிறது. இதன் மூலம் தகவலறிந்த முடிவுகளை எடுக்க மக்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. பயனர் நட்பு வடிவத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள இது, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் / ஒப்புகைச் சீட்டு இயந்திரம், வாக்காளர் பட்டியல் / வாக்காளர் சேவைகள், தேர்தல்களை நடத்துதல் மற்றும் பிறவற்றைச் சுற்றியுள்ள கட்டுக்கதைகள் மற்றும் தவறான தகவல்களுக்கு பதிலளிக்கிறது.

ஏற்கனவே பரவியுள்ள தேர்தல் தொடர்பான போலி தகவல்கள், சமூக ஊடக தளங்களில் பரவும் சாத்தியமான கட்டுக்கதைகள், முக்கியமான




தலைப்புகளில் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் மற்றும் அனைத்து பங்குதாரர்களுக்கும் வெவ்வேறு பிரிவுகளின் கீழ் குறிப்பு பொருட்கள் ஆகியவற்றை இந்தப் பதிவேடு வழங்குகிறது. பதிவேடு தொடர்ச்சியாக புதுப்பிக்கப்படும்.

'கற்பிதம் எதிர் உண்மை என்ற பதிவேட்டில்' வழங்கப்பட்ட தகவல்களுடன் எந்தவொரு வகையிலும் பெறப்பட்ட சந்தேகத்திற்குரிய தகவல்களை சரிபார்க்கவும் உறுதிப்படுத்தவும் அனைத்து பங்குதாரர்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். தகவல்களைச் சரிபார்க்கவும், தவறான தகவல்கள் பரவுவதைத் தடுக்கவும், கட்டுக்கதைகளை நீக்கவும், 2024 பொதுத் தேர்தல்களின் போது முக்கிய பிரச்சினைகள் குறித்து அறிந்திருக்கவும் இந்த தளம் பயன்படுத்தப்படலாம். பயனர்கள் பதிவேட்டில் இருந்து பல்வேறு சமூக ஊடக தளங்களில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளலாம்.

– K.மாரிதுரை

# நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை வீழ்த்திக் காட்டுவோம்: ராகுல் காந்தி



நாடாளுமன்றத் தேர்தலில் மோடியை வீழ்த்திக் காட்டுவோம் என ராகுல் காந்தி சூளுரை விடுத்துள்ளார். மக்களவைத் தேர்தலுக்கான காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கை வெளியிடப்பட்டது. டெல்லியில் காங்கிரஸ் தலைவர் கார்கே, ராகுல் காந்தி உள்ளிட்டோர் தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர். மக்களவை தேர்தலுக்காக 5 தலைப்புகளில் 25 வாக்குறுதிகளை காங்கிரஸ் கட்சி அளித்துள்ளது. இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், சமூக நீதியை அடிப்படையாக கொண்டு காங்கிரஸ் தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளது.

இந்நிலையில் கூட்டத்திற்கு பிறகு பேசிய அவர் கூறியதாவது, 2024 மக்களவை தேர்தலில் பாஜகவை வீழ்த்த முடியும் என்ற நம்பிக்கை தனக்கு உள்ளதாக ராகுல் காந்தி கருத்து தெரிவித்தார். இந்தியா அனைத்து துறைகளிலும் வளர்ச்சி அடைந்ததைப் போல் ஊடகங்களில் காண்பிக்கப் படுவதாக ராகுல் குற்றச்சாட்டு வைத்தார். வாஜ்பாய் பிரதமராக இருந்த காலத்தில் ஊடகத்தால் ஏற்படுத்தப்பட்ட மற்றும் அதே உணர்வுதான் தற்போதும் உள்ளது. வாஜ்பாய் காலத்தில் இந்தியா ஒளிர்வதாக ஊடகங்களில் பிரச்சாரம் செய்யப்பட்டபோது யார் வென்றது என்பது நினைவிருக்கும்.

– P.ஸ்டாலின்

# பத்திரங்களை நிலுவையில் வைக்கும் சார் பதிவாளர்களுக்கு கிடுக்கிப்பிடி

## 10 கட்டளைகள் பிறப்பித்தது பதிவுத்துறை



உரிய காரணமின்றி, பத்திரங்களை நிலுவையில் வைக்கும் சார் பதிவாளர்களுக்கு கிடுக்கிப்பிடி போடும் வகையில், 10 கட்டளைகள் அடங்கிய உத்தரவை, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் பிறப்பித்துள்ளார்.

அதன் விபரம்:

பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் பத்திரத்தை, சார் பதிவாளர் நிலுவையில் வைக்கும் போது, 'ஸ்டார் 2.0 'மென்பொருளில், 'டிராப் டவுன் பாக்ஸ்' என்ற பிரிவில், உரிய காரணத்தை பதிவிட வேண்டும்

ஆவணதாரர் கோரிக்கை அடிப்படையில், ஒரு பத்திரம் நிலுவையில் வைக்கப்படும் நிகழ்வில், அதற்கான எழுத்துப்பூர்வ கடிதம் பெறப்பட்டு இருக்க வேண்டும்

நிலுவையில் வைக்கப்படும் பத்திரங்கள் விஷயத்தில், 15 நாட்களுக்குள் முடிவு எட்டப்பட வேண்டும்.

பட்டாவின் உண்மை தன்மை சரிபார்ப்பு தேவைப்படும் நிகழ்வில், இணையதளம் வாயிலாக விபரங்களை சரிபார்த்து, பத்திரத்தை திருப்பித்தர வேண்டும்.

இணைய வழியில் பட்டா தகவல்களை சரிபார்க்க முடியாத நிலையில், சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு கடிதம் எழுதி உண்மை தன்மையை சரி பார்க்க வேண்டும்; இது தொடர்பான கடிதப் போக்குவரத்து பிரதிகளை, ஆவணதாரருக்கும் அனுப்ப வேண்டும்.

முடக்கம் செய்ய வேண்டிய நிலையில் உள்ள பத்திரங்களில், மதிப்பு நிர்ணயம், கட்டட களப்பணி போன்ற பணிகளை, 15 நாட்களுக்குள் முடித்து மேலதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

முடக்கம் செய்ய வேண்டிய பத்திரம் தொடர்பான குறிப்புகள் வந்ததில் இருந்து, 15 நாட்களுக்குள், காரணம் காட்டக் கோரும் அறிவிப்பை, ஆவணதாரருக்கு பதிவு அஞ்சலில் அனுப்ப வேண்டும்.

கடிதம் அனுப்பி, 15 நாட்களில் ஆவணதாரரிடம் இருந்து உரிய பதில் வராத நிலையில், அந்த ஆவணம் முடக்கப்பட்டதற்கான அறிவிப்பை பிறப்பிக்கலாம்

இதில் உரிய நடைமுறைகளை பின்பற்றி, மூன்று மாதங்களுக்குள் இறுதி முடிவு எடுக்க வேண்டும்

மாவட்ட பதிவாளர் நிலையில் உள்ள சார் பதிவாளர் அலுவலகங்களில், பொறுப்பு நிலையில் உள்ள சார் பதிவாளர், உதவியாளர்கள், முடக்க ஆவணம் குறித்த விபரங்களை காலம் தாழ்த்தாமல், உடனுக்குடன் மேலதிகாரிகளுக்கு அனுப்ப வேண்டும்.

இந்த வழிமுறைகளை பின்பற்றாத சார் பதிவாளர்கள், மாவட்ட பதிவாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



– ந.மோகன், நாட்றம்பள்ளி

# அனைவரும் வாக்களிக்க வேண்டும்!

தேர்தலில், 100 சதவீதம் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, மாநகர போலீஸ் கமிஷனர் தலைமையில், கையெழுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

தமிழகத்தில் ஏப்., 6ம் தேதி ஒரே கட்டமாக சட்டசபை தேர்தல் நடக்கிறது. தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களிடம் ஓட்டுப்பதிவின் அவசியம் குறித்து, தேர்தல் கமிஷன் பல்வேறு வழிகளில் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. ஒரு பகுதியாக, போலீசார் பங்கேற்ற கையெழுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதற்காக, மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் பெரிய அளவிலான கையெழுத்து பேனர் வைக்கப்பட்டிருந்தது.

இதில், மாநகர போலீஸ் கமிஷனர் சுமித்சரண் கையெழுத்திட்டு, ''100 சதவீதம் அனைவரும் வாக்களிக்க வேண்டும்,'' என்றார். மேலும், உங்கள் வாக்கு விலைமதிப்பற்றது, பணத்துக்கும் பொருளுக்கும் ஒருபோதும் அதனை விற்று விடாதீர்கள். ஓட்டுக்கு பணம், பொருள் தருவதும், பெறுவதும் இரண்டுமே தண்டனைக்குரியது. ஆகவே சிந்தித்து, தவறாமல் கண்ணியத்துடன் அனைவரும் வாக்களியுங்கள்' என்பன உட்பட கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டு விழிப்புணர்வு




ஏற்படுத்தப்பட்டது. கமிஷனரை தொடர்ந்து, சட்டம்-ஒழுங்கு துணை கமிஷனர் ஸ்டாலின், குற்றப்பிரிவு துணை கமிஷனர் உமா, போக்குவரத்து பிரிவு துணை கமிஷனர் முத்தரசு, தலைமையிட துணை கமிஷனர் மயில்வாகனன் மற்றும் கமிஷனர் அலுவலக போலீசார், ஊழியர்கள் உட்பட பலரும், தங்களது கையெழுத்திட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதேபோன்று, மாநகரில் உள்ள அனைத்து போலீஸ் ஸ்டேஷன்களில் கையெழுத்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது. இதில், அந்தந்த ஸ்டேஷன்களில் பணிபுரியும் போலீசார், விழிப்புணர்வு பேனரில், 100 சதவீதம் வாக்களிப்போம் என்று உறுதியளித்து கையெழுத்திட்டனர்.

– இளையதர்ஷினி


## Advertisement Tariff

| | | |
|---|---|---|
| Full Page Color Back Wrapper | : | ₹ 15,000/- |
| Full Page Color Inner Wrapper | : | ₹ 12,000/- |
| Half Page Color Wrapper | : | ₹ 8,000/- |
| Full Page Black & White | : | ₹ 8,000/- |
| Half Page Black & White | : | ₹ 5,000/- |
| **Annual Subscription** | : | ₹ 240/- |

Administrative Office:

**PENA KURAL**
3/885, Pillaiyar Kovil Street, Mettukuppam,
OMR, Chennai, Tamil Nadu, India - 600097.
Ph: 044-35906002, 9962245338
Email: penakural@yahoo.com

PENA KURAL TAMIL MONTHLY

UPI Number:
9962245338
BHIM Paytm UPI UNIFIED PAYMENTS INTERFACE

# 85 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதை ஊக்குவிக்க தேர்தல் ஆணையம் கூடுதல் முன்முயற்சிகளை மேற்கொண்டுள்ளது







ஒரு முன்னோடி முயற்சியாக, இந்திய தேர்தல் ஆணையம் (ECI), முதல் முறையாக, 2024 மக்களவைத் தேர்தலில், 85 வயதுக்கும் மேற்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டில் இருந்து வாக்களிக்கும் வசதியை வழங்கியுள்ளது. இந்தப் பிரிவுகளில் உள்ள வாக்காளர்கள் ஏற்கனவே முதல் மற்றும் இரண்டாம் கட்ட வாக்குப்பதிவுக்கு வாக்களிக்கத் தொடங்கிவிட்டனர்.

இந்த முன்முயற்சி தேர்தல் செயல்முறையில் அனைவரையும் உள்ளடக்கிய தன்மையை உறுதி செய்வதிலும், ஜனநாயக பங்கேற்பை அதிகரிப்பதிலும் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துகிறது. நாடு முழுவதும் 85 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் சுமார் 81 லட்சம் பேரும், மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் சுமார் 90 லட்சம் பேரும் உள்ளனர்.

இது ஒரு முன்மாதிரியான முயற்சி என இந்தப் பிரிவு வாக்காளர்கள் தெரிவித்துள்ளனர். தேர்தல் ஆணையத்தின் முயற்சிக்கு நன்றியையும் அவர்கள் தெரிவித்துள்ளனர். முதல் மற்றும் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவுக்கு இந்த நடைமுறை ஏற்கெனவே தொடங்கி விட்டது. வாக்குச்சாவடி ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களின் ஒத்துழைப்புடம் வீட்டிலிருந்து வாக்களிக்கும் நடைமுறை நடைபெறுகிறது. வாக்குப்பதிவில் ரகசியம் பராமரிக்கப்படுகிறது.



இந்த வசதியைப் பெறுவதற்கான செயல்முறை எளிமையானது. இதில் தேர்தல் அறிவிக்கை வெளியான 5 நாட்களுக்குள் தகுதியான வாக்காளர்கள் படிவம் 12டி-யைப் பூர்த்தி செய்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் மாற்றுத்திறனாளி சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

தமிழ்நாடு, ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் 85 வயதுக்கும் மேற்பட்ட மற்றும் மாற்றுத் திறனாளி வாக்காளர்கள் வாக்களிக்கும் புகைப்படங்கள் https://elections24.eci.gov.in/ என்ற இணையதளத்தில் இடம்பெற்றுள்ளன.

– ꠄ.ஜெயராஜ்

# வெப்ப அலை தொடர்பான சூழ்நிலைகளுக்கான தயார்நிலை குறித்து பிரதமர் ஆய்வு






வரவிருக்கும் வெப்ப அலை பருவத்திற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆய்வு செய்வதற்கான கூட்டத்திற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமை தாங்கினார்.

2024 ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்திற்கான வெப்பநிலை கண்ணோட்டம், வரவிருக்கும் கோடை காலத்திற்கான (ஏப்ரல் முதல் ஜூன் வரை) முன்னறிவிப்புகள், நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இயல்பான அதிகபட்ச வெப்பநிலையை விட அதிகமாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள், குறிப்பாக மத்திய இந்தியா மற்றும் மேற்கு தீபகற்ப இந்தியாவில் அதிக நிகழ்தகவு ஆகியவை குறித்து பிரதமருக்கு விளக்கப்பட்டது.

அத்தியாவசிய மருந்துகள், நரம்பு வழியாக செலுத்தப்படும் திரவங்கள், ஐஸ் கட்டிகள், ஓ.ஆர். எஸ் மற்றும் குடிநீர் ஆகியவற்றின் அடிப்படையில் சுகாதாரத் துறையின் தயார்நிலை மதிப்பாய்வு செய்யப்பட்டது.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்கள் போன்ற அனைத்து தளங்களிலும் குறிப்பாக பிராந்திய மொழிகளில் அத்தியாவசியமான தகவல், கல்வி மற்றும் தொடர்பு / விழிப்புணர்வு செய்திகளை சரியான நேரத்தில் பரப்புவது குறித்து வலியுறுத்தப்பட்டது. 2024-ஆம் ஆண்டில் வழக்கத்தை விட வெப்பமான கோடைக்காலம் எதிர்பார்க்கப்படுவதுடன், இது பொதுத் தேர்தல் நேரமாக இருப்பதால், மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் வழங்கிய ஆலோசனைகள் பிராந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பரவலாக மக்களிடம் கொண்டு செல்லப்படுவதன் அவசியம் உணரப்பட்டது.

அரசின் ஒட்டுமொத்த அணுகுமுறையையும் பிரதமர் வலியுறுத்தினார். மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவில் அரசின் அனைத்து பிரிவுகளும், பல்வேறு அமைச்சகங்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறினார். மருத்துவமனைகளில் போதிய வசதிகளை தயார்நிலையில் வைத்திருப்பதுடன் விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் வலியுறுத்தினார். காட்டுத் தீயை விரைந்து கண்டறிந்து அணைக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் எடுத்துரைத்தார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமரின் முதன்மைச் செயலாளர், உள்துறை செயலாளர், இந்திய வானிலை ஆய்வு மையம் (ஐ.எம்.டி) மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் அதிகாரிகள் பங்கேற்றனர்.

– நா.வீ.சிவசங்கர்

# சென்னையில் காவல்துறையினரை தாக்கிய கஞ்சா வியாபாரிகள்:

## பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம்



“தமிழகத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டமும், கடத்தலும் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்து வருகின்றன. உலக அளவிலான போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் மையமாக தமிழகம் மாறி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை” சென்னையில் காவல்துறையினரை கஞ்சா வியாபாரிகள் தாக்கியதற்கு பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கண்டனம் தெரிவித்து உள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டு உள்ள அறிக்கையில், சென்னை கண்ணகி நகரில் உமாபதி என்ற கஞ்சா வணிகரை கைது செய்வதற்காக சென்ற இரு காவலர்களை கஞ்சா போதையில் இருந்த உமாபதியும், அவரது நண்பரும் இணைந்து கண்மூடித்தனமாக தாக்கியதில் இரு காவலர்களும் அப்பகுதியில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மருத்துவம் பெற்று வருகின்றனர்.

அதேபோல், கும்பகோணம் பாலக்கரையில் கஞ்சா போதையில் இருந்த 8 பேர் கொண்ட கும்பல் பேருந்து ஓட்டுனர் மற்றும் நடத்துனரையும், அதை படம் பிடித்த இரு செய்தியாளர்களையும் கொடூரமாகத் தாக்கியுள்ளனர். கஞ்சா அடிமைகளால் காவல்துறையினர், போக்குவரத்துத் தொழிலாளர்கள், செய்தியாளர்கள், பொதுமக்கள் என எந்தத் தரப்பினருக்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருப்பது பெரும் கவலையும், அதிர்ச்சியும் அளிக்கிறது.

கண்ணகி நகரைச் சேர்ந்த உமாபதி கஞ்சா வணிகம் செய்வதையே முழு நேரத் தொழிலாகக் கொண்டவர். இதற்காக பல முறை கைது செய்யப்பட்ட போதிலும் உடனடியாக விடுதலை செய்யப்பட்டு விடுவதால் அவருக்கு சட்டத்தின் மீது எந்த அச்சமும் இல்லை. அவர் கஞ்சா வணிகம் செய்வது குறித்து காவல்துறையினருக்கு புகார் அளித்த இருவரைப் பற்றிய விவரங்களை காவல்துறையினரிடமிருந்து பெற்ற உமாபதி அவர்கள் இருவரையும் அரிவாளால் வெட்டி கொலை செய்ய முயற்சித்துள்ளார். அவர்களும் ஆபத்தான நிலையில் மருத்துவம் பெற்று வருகின்றனர். இது குறித்த வழக்கில் கைது செய்யச் சென்ற போது தான் காவலர்களை அவர் தாக்கியுள்ளார்.

உமாபதி உள்ளிட்ட கஞ்சா வணிகர்கள், கஞ்சா போதைக்கு அடிமையானவர்களைக் கண்டு அஞ்சி நடுங்குவதாக கண்ணகி நகர் மக்கள் தெரிவித்துள்ளனர். கண்ணகி நகர் மட்டுமின்றி தமிழ்நாடு முழுவதும் இதே நிலை தான் காணப்படுகிறது. மது போதையைக் கடந்து கஞ்சா போதைக்கு சிறுவர்கள் கூட அடிமையாகிக் கிடக்கின்றனர். பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் கூட கஞ்சா போதையில் செல்வதும், அதைக் கண்டித்து எச்சரிக்கும் ஆசிரியர்களைத் தாக்குவதும் அன்றாட நிகழ்வுகளாகிவிட்டன. கஞ்சா போதைக்கு செல்லாமல் இளைய தலைமுறையினரைத் தடுப்பதும், போதைக்கு அடிமையாவதைத் தடுப்பதும் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளன.

சென்னை உட்பட தமிழ்நாடு முழுவதும் கஞ்சா, அபின், ஹெராயின், கோகைன், எல்எஸ்டி என, அனைத்து வகையான போதைப் பொருட்களும் கிடைக்கின்றன. 24 மணி நேரம் வரை போதையில் மிதக்க வைக்கும் போதைப்பொருட்கள் கூட சென்னையில் தாராளமாகக் கிடைக்கின்றன. தமிழகத்தில் போதைப் பொருட்கள் நடமாட்டமும், கடத்தலும் கடந்த சில ஆண்டுகளாகவே அதிகரித்து வருகின்றன. உலக அளவிலான போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் மையமாக தமிழகம் மாறி வருகிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

தமிழகத்தில் போதைப் பொருட்களின் நடமாட்டமும், பயன்பாடும் அதிகரித்து வருவது குறித்தும், அவற்றை ஒழிக்க வேண்டியதன் தேவை குறித்தும் பல ஆண்டுகளாகவே வலியுறுத்தி வருகிறேன். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்த போதும் போதைப் பொருட்களை கட்டுப்படுத்தும்படி வலியுறுத்தினேன். ஆனால், போதைப் பொருட்கள் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த அரசும், காவல்துறையும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அதன் விளைவு தான் தமிழகத்தில் போதைப்பொருட்கள் தலைவிரித்தாடுகின்றன.

தமிழ்நாட்டில் போதைப் பொருட்களின் நடமாட்டம் அதிகரிக்கும் போதெல்லாம் கஞ்சா வேட்டை என்ற பெயரில் காவல்துறையினர் சில ஆயிரம் பேரை கைது செய்வார்கள். ஆனால், அடுத்த நாளே அவர்கள் வெளியில் வந்து மீண்டும் கஞ்சா வணிகத்தைத் தொடங்கி விடுவார்கள். ஆட்சியாளர்கள் மற்றும் காவல்துறையினரின் மறைமுக ஆதரவுடன் தான் தமிழ்நாட்டில் கஞ்சா வணிகம் நடைபெறுகிறது என்று வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டுகிறேன். தமிழ்நாட்டில் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்படா விட்டால், இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தை யாராலும் காப்பாற்ற முடியாது என்பதே உண்மை.

தமிழ்நாடு இன்று எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சினையே போதைப் பொருட்கள் நடமாட்டமும், அதனால் இளைஞர்கள் சீரழிவதும் தான். தமிழ்நாடு அரசு இனியாவது விழித்துக் கொண்டு போதைப் பொருட்களுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்; தமிழகத்தை போதையில்லாத மாநிலமாக மாற்ற வேண்டும்.

**– ந.மதிவாணன்**



# ஆடு தீண்டாப் பாளை

# மருத்துவ பயன்கள்

ஆடுதீண்டாப்பாளைபெயரைகேட்டதும் ஆடு இந்த செடியை உணவுக்காக கடிக்காது என்பதும் அதனாலயே இந்த பெயர் ஏற்பட்டதும் விளங்கும். குமட்டலான மணமும், வெப்பத் தன்மையும் கொண்டது. தரையில் படர்ந்து வளரும் செடியின் இலைகளின் மேல் வெள்ளை பூச்சுடன் காணப்படும். தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் விளையக்கூடியது.

ஆடு தீண்டாப்பாளை கருப்பு மண் உள்ள நிலங்கள், சற்றே உப்புச்சுவை கொண்ட கழி நிலங்களில் மிகவும் பரவலாக வளர்கின்றது. பங்கம்பாளை, வாத்துப்பூ ஆகிய பெயர்களும் ஆடு தீண்டாப்பாளை தாவரத்திற்கு உண்டு. முழுத்தாவரமும் மருத்துவப் பயன் கொண்டது. ஆடுதீண்டாப்பாளையை முறையாக பயன்படுத்தினால் குடற்புழு, சிலந்தி, பூச்சிகடிகளின் நஞ்சுகள், கரும்படை, கரப்பான் 80 வகை வாதநோய்கள் குணமாகும்.

சில பெண்களுக்கு பத்து மாதம் ஆகியும் குழந்தை பிறப்பின் வலி எடுக்காமல் கடும் வேதனையுடன் முறையற்ற வலி உண்டாகும். வேதனையில் துடிக்கும் நிலை உண்டாகும். அவர்களுக்கு இதன் வேரை சூரணமாக்கி அதில் பத்து கிராம் அளவில் வெந்நீரில் கொடுக்க வேதனை தீரும் வகையில் குழந்தை பிறப்பு உண்டாகும்.

எந்த பாம்பு கடித்தது என்று தெரியாமல் பாம்பு கடி ஏற்பட்டால் இதன் வேரை அரைத்து காலை வெறும் வயிற்றில் ஐந்து நாட்கள் தொடர்ந்து கொடுத்தால் மூன்று நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டால் எல்லாவிதமான பாம்பு கடிகளும் நீங்கும். மருந்து சாப்பிடும் காலத்தில் 24மணிநேரம் தூங்காமல் இருந்து புதுப்பாளையில் உப்பில்லாத பச்சரிசியை பொங்கி சாப்பிட வேண்டும். பெண்கள் வயிற்றில் உள்ள கருப்பை கோளாறு காரணமாக குழந்தை பிறப்பில் பாதிப்பு ஏற்படும். பெண்கள் ஆடுதீண்டாப்பாளையின் விதைகளை சூரணம் செய்து ஐந்து கிராம் எடுத்து கையளவு சிற்றாமணக்கெண்ணெயில் கொடுக்க பேதியாகும். மாதம் ஒரு முறை என மூன்று மாதம் கொடுக்க அதன் பிறகு கரு ஏற்படும். பெண்களின் வயது உடல் தன்மை அறிந்து கொடுக்க வேண்டும்.

உடல் வலுப்பெற ஆடுதீண்டாப் பாளை இலையை காயவைத்து பொடியாக்கி (2 ஸ்பூன்) எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு ஒரு செம்பு நீரை ஊற்றி ஒரு டம்ளராக சுண்டவைத்து கஷாயமாக்கி வடிகட்டி அருந்தி வந்தால்

உடல் வலுப்பெறும்.வயிற்றுப் பூச்சிகள் ஒழிய ஆடுதீண்டாப் பாளையை நிழலில் உலர்த்தி நன்றாக பொடி செய்து வைத்துக் கொண்டு (1ஸ்பூன்) அளவு எடுத்து அதில் தேன் கலந்து கொடுத்து இரவு படுக்கப்போகும் முன் கொடுத்து வந்தால் வயிற்றுப் பூச்சிகள் விரைவில் நீங்கும். தலைமுடி உதிர்வை தடுக்க ஆடுதீண்டாப் பாளை இலைகளை எடுத்து நிழலில் உலர்த்தி பொடியாக்கி சீயக்காய் தூளுடன் கலந்து வைத்துக் கொண்டு தலைக்கு தேய்த்து குளித்து வந்தால் முடி கொட்டுவது உடனே நிற்கும்.

மாதவிடாய் வயிற்று வலி, ஒழுங்கற்ற இரத்தப்போக்கு சீராக ஆடுதீண்டாப்பாளை இலைகள் (5) எடுத்து பாத்திரத்தில் போட்டு ஒரு செம்பு தண்ணீரை ஊற்றி ஒரு டம்ளராக சுண்டவைத்து கஷாயமாக்கி ஒருவேளை குடித்து வந்தால் மாதவிடாய் வயிற்று வலி, ஒழுங்கற்ற இரத்தப்போக்கு பிரச்சனைகள் தீரும். ஆடுதீண்டாப் பாளையை அரைத்து (10 மி.லி) அளவு சாறு எடுத்து காலை மாலை என இருவேளையும் குடித்துவந்தால் ஒழுங்கற்ற மாதவிடாய் சீராகும். விட்டுவிட்டுவரும் காய்ச்சல் குணமாகும். ஆரோக்கியமான சுகப்பிரசவம் பெற ஆடுதீண்டாப்பாளை வேர் (2 கிராம்) எடுத்து பொடி செய்து தினந்தோறும் ஒரு டம்ளர் சுடுநீரில் கலந்து ஒரு வேளை குடித்து வந்தால் ஆரோக்கியமான சுகப் பிரசவம் ஏற்படும்.

பெண்களுக்கு ஏற்படும் முக்கியமான பிரச்சனை முறையற்ற மாதவிடாய். இதனால் மனஉளைச்சலும் சில பெண்களுக்கு ஏற்படும். இவர்கள் ஆடுதீண்டாப்பாளையின் இலைச்சாற்றை காலை மாலை பத்து மிலி அளவில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் நாளடைவில் மாதவிடாய் ஒழுங்காகும். விதைச்சூரணம் ஐந்து கிராம் விளக்கெண்ணெயில் சாப்பிட மலத்தில் கலந்துள்ள கிருமிகள் பேதியாகி நீங்கும். முறைக்காய்ச்சல் தணியும். ஆடுதீண்டாப்பாளையின் முழுச்செடியின் சாற்றில் அதே அளவு நல்லெண்ணெய் கலந்து பக்குவமாய் காய்ச்சி எடுத்து வடிகட்டி கொள்ளவேண்டும். அதை உடலில் ஏற்படும் கரும்படையில் பூச அவை நீங்கி குணம் ஏற்படும். பாம்பு கடித்து



விட்டால் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் கொடுக்க விஷம் நீங்கும்.

இந்த சூரணத்தை கொடுத்து வந்தால் யானை தோல் சொறி என்ற தோல் நோய் நீங்கும். சிலருக்கு முகம் கை கால்களில் கருமை படர்ந்து இருக்கும். இதை கருங்குட்டம் என்பார்கள் இவர்கள் காலை வேளையில் இலைச்சூரணத்தை இரண்டு கிராம் அளவில் வெந்நீரில் கலந்து குடிக்க கருங்குட்டம் குணமாகும். கிரந்திகரப் பன் வெக்கை கேசருவி மாந்தை யரந்தை விளையை யறுக்கும் துறந்து பிரியொணா நோய்களையும் பின்முன்பா ராமல்ம றியுணா மூலியடை வாய் ஆடுதொடப்பாளைக் சுகக்கிருமி வன் சிலந்தி நீடுகளுங் குட்டம் நிறை கரைப்பான் ஆடிடச்செய் என்பது வாய்வும் இகல்குட்ட முந்தீரும் திண்பெறுதற் றாது வுமாரு செய்ய என்கிறார் அகத்தியர் பெருமான்.

ஆடே தீண்டாத செடி என்றாலும் அதை ஆராய்ந்து அதன் தனித்தன்மையும் அறிந்து நாம் நலமாக வாழ்வதற்கு வகுத்த முறைகளை பயன்படுத்தி தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி நலமுடன் வாழ்வோம்.

– ப.தனசேகர்

# பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் முகமாக மாறிவிட்டார்; வளர்ச்சி, பொருளாதாரம் மேம்பட்டது:

## காங்கிரஸ் உறுப்பினர் பிராட் ஷெர்மன்

பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் முகமாக மாறிவிட்டார், 2014 முதல் நாடு கண்டுள்ள வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்தியத் தலைவரைப் பாராட்டிய அமெரிக்க மூத்த காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

அமெரிக்க காங்கிரஸில் இந்தியாவின் சிறந்த நண்பர்களில் ஒருவராக கருதப்படும் பிராட் ஷெர்மன், பிரதமர் மோடியின் ஆட்சிக் காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இருதரப்பு உறவை வலுப்படுத்துவதைக் கண்டதாகக் கூறினார்.

எனினும், இந்தியா-அமெரிக்க உறவில் ரஷ்யாவுடனான இந்தியாவின் பாதுகாப்பு உறவு சவாலாக உள்ளது என்றார். "அவர் [மோடி] இந்தியாவின் முகமாகிவிட்டார், நாங்கள் மிகவும் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். நிச்சயமாக, ஒவ்வொரு நாட்டிற்கும் அதன் சவால்கள் உள்ளன, ஒவ்வொரு தலைவருக்கும் அதன் சவால்கள் உள்ளன. ஒரு நாட்டின் வெற்றியை நான் ஒரு தலைவருக்கு மட்டும் கூறவில்லை. அதாவது, நீங்கள் 1.3 (சிக்) மற்றும் பில்லியன் மக்களைப் பெற்றுள்ளீர்கள், அவர்கள் அனைவரும் இணைந்து இந்தியாவை இன்னும் வெற்றிகரமான நாடாக மாற்ற முயற்சி செய்கிறார்கள்," என்று திரு. ஷெர்மன் ஏப்ரல் 9 அன்று றிஜிமி க்கு அளித்த பேட்டியில் கூறினார்.

ஹவுஸ் வெளியுறவுக் குழுவில் மூத்த ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த திரு. ஷெர்மன் (69) கடந்த 28 ஆண்டுகளாக இந்தியா-அமெரிக்க உறவில் பணியாற்றி வருகிறார்.

"அமெரிக்க-இந்தியா உறவில் மிகப்பெரிய வலுவூட்டல் ஏற்பட்டுள்ளது. இது எனக்குத் தெரியும், ஏனென்றால் நான் அமெரிக்க மாளிகையில் உள்ள அமெரிக்க இந்திய காக்கஸின் முன்னாள் தலைவராக இருக்கிறேன், இது மிகப்பெரியது. இரு கட்சிக் கூட்டங்களில் நாங்கள் அதை மிகப்பெரியதாக மாற்றினோம். குறிப்பாக பாதுகாப்புப் பகுதியில் ராணுவ உளவுத்துறையைப் பகிர்ந்துகொள்வதோடு, இந்திய-பசிபிக் சுதந்திரமாகவும் அமைதியாகவும் இருக்க முயற்சி செய்வதில் கவனம் செலுத்துவதன் மூலம் மிகப்பெரிய கூட்டு



நடவடிக்கைகள் மற்றும் பயிற்சிகளை நாங்கள் பார்த்திருக்கிறோம்," என்று அவர் கூறினார்.

"அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான வர்த்தகம் உயர்ந்துள்ளது. நிச்சயமாக, இந்தோ-அமெரிக்கர்கள் சிறந்த கல்வியறிவு பெற்றவர்கள் மற்றும் அமெரிக்காவில் உள்ள அனைத்து இனக்குழுக்களிலும் அதிக வருமானம் கொண்டவர்கள்," என்று திரு. ஷெர்மன் கூறினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவை விரிவுபடுத்த விரும்புவதாக காங்கிரஸார் கூறினார்.

"ஜனநாயகம் இல்லாத மற்றும் சட்டத்தின் நிறுவப்பட்ட ஆட்சி இல்லாத நாடுகளை விட இந்தியா ஒரு சிறந்த முதலீட்டு வாய்ப்பு மற்றும் வணிகம் செய்வதற்கான சிறந்த இடம் என்பது குறித்து நான் பல வணிகர்களிடம் பேசியுள்ளேன். குறிப்பாக சீனாவில் உற்பத்தி செய்பவர்கள் அது ஜனநாயகம் அல்ல, சட்டத்தின் பாரம்பரியத்தை நம்பக்கூடிய ஒரு நாடு அல்ல என்பதை சிந்திக்க வேண்டும், "என்று அவர் கூறினார்.




"ஒரு வணிகத்தின் வெற்றியில் நியாயமான மற்றும் நேர்மையான நீதிமன்ற அமைப்பை அணுகுவது மிகவும் முக்கியமானது. மேலும் சில நாடுகள் வழங்காத சலுகைகளை இந்தியா வழங்குகிறது," என்றார்.

அதே சமயம், ரஷ்யாவுடன் இந்தியா பாதுகாப்பு உறவை தொடர்கிறது என்றும், இது அமெரிக்க-இந்தியா உறவில் சவாலாக இருப்பதாகவும் காங்கிரஸ்காரர் கூறினார்.

"நாங்கள் இப்போது ரஷ்யாவுடன் பெரிய உறவுமுறையில் இல்லை. உக்ரைனில் போரின் வெற்றிகரமான தீர்வை நாங்கள் அனைவரும் எதிர்நோக்குகிறோம் , அது நிச்சயமாக உலகிற்கு நிறைய உதவும் என்று நான் நினைக்கிறேன். இந்தியாவில், நான் முதலீட்டாளர்களுடன் பேசும்போது, சமாளிக்க இன்னும் சில சிவப்பு நாடா உள்ளது என்று நான் நினைக்கிறேன், அது மேம்படுவதை நான் எதிர்நோக்குகிறேன்," என்று அவர் கூறினார்.

கலிபோர்னியாவின் 32வது காங்கிரஸ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் திரு. ஷெர்மன், லாஸ் ஏஞ்சல்ஸில் இந்திய துணைத் தூதரகத்தை உருவாக்க விரும்புவதாகக் கூறினார்.

"எனக்கு மிக முக்கியமாக, நான் லாஸ் ஏஞ் சல்ஸில் உள்ள இந்திய தூதரகத்தைப் பார்க்க வேண்டும். சான் பிரான்சிஸ்கோ அற்புதமானது, ஆனால் இது அமெரிக்க தொழில்முனைவோரின் உண்மையான மையமான லாஸ் ஏஞ்சல்ஸிலிருந்து நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் உள்ளது," என்று திரு. ஷர்மன் கூறினார். - Courtesy, thehindu.com

– **தமிழ்மணி**

# எனது மத்திய அரசின் சுகாதாரத் திட்டம் ஐபோன் செயலியை மத்திய சுகாதார அமைச்சகம் தொடங்கியுள்ளது

எனது மத்திய அரசின் சுகாதாரத் திட்டம் ஐபோன் செயலியை மத்திய சுகாதார அமைச்சகம் தொடங்கி யுள்ளது. இதனை புதுதில்லியில் 03.04.2024 அன்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகச் செயலாளர் திரு அபூர்வா சந்திரா தொடங்கிவைத்தார். மத்திய அரசு சுகாதாரத் திட்ட பயனாளி களுக்கான மின்னணு சுகாதார பதிவுகள், தகவல்கள் அணுகலை மேம்படுத்தி இந்தச் செயலி வடிவமைக்கப்பட்டுள்ளது.

அப்போது பேசிய மத்திய சுகாதாரத் துறைச் செயலாளர், எனது மத்திய அரசின் சுகாதாரத் திட்டம் ஐபோன் செயலி, சுகாதார சேவைத் துறையில் அவசியமான ஒன்று என்று கூறினார். இது மத்திய அரசின் சுகாதாரத் திட்டப் பயனாளிகளுக்கு அத்தியாவசிய சுகாதார அம்சங் களை அவர்கள் எளிதில் அணுகுவதற்கு அதிகாரம் அளிக்கிறது என்று தெரிவித்தார். இந்த முயற்சி சுகாதார சேவைகளின் தரம் மற்றும் அணுகலை பயன்படுத்த தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்கான அரசின் தொலைநோக்குப் பார்வைக்கு இணங்க அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

இந்தச் செயலி இமாச்சலப் பிரதேச தேசிய தகவல் மையம் மற்றும் தேசிய தகவல் மைய சுகாதார தொழில்நுட்ப குழுக்களால் உருவாக்கப்பட்டது. இது மத்திய அரசின் சுகாதாரத் திட்டப் பயனாளிகளுக்கு தகவல் மற்றும் அணுகலை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட அம்சங்களை வழங்கும் வசதியான மொபைல் செயலியாகும். இந்த செயலி தற்போது ஆன்ட்ராய்டு மற்றும் ஐபோன் தளங்களிலும் கிடைக்கும்.

– B. நாராயணசாமி

# சிறுநீரக நோய்களைப் குணப்படுத்தும் ஆசிய கண்டத்திலே அபூர்வ நடராஜர்

அருள்மிகு சுத்த ரத்தினேசுவரர்: இத்திருத் தலத்தில் வீற்றிருக்கும் மூலவர் சுயம்பு லிங்கமாக பக்தர்களுக்கு காட்சி தருகின்றார். இந்த மூலவருக்கு சுத்த ரத்தினேஸ்வரர், துய்ய மாமணீஸ்வரர், மாசிலாமணி என்ற மூன்று பெயர்கள் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 12, 13, 14 இந்த 3 தேதிகளில் சூரிய ஒளியானது கர்ப்பகிரகத்தில் இருக்கும் மூலவரின் மேல் படுகிறது. இதே போல் வைகாசி மாதம் விசாக திருவிழாவின் போது, சூரியனின் கதிர்கள் 3 நிமிடங்கள் மூலவரின் மீது படுவது மற்றொரு சிறப்பு.

இந்த கோவிலில் வீற்றிருக்கும் பஞ்ச நதன நடராஜர் சிலை மிகவும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகிறது. பார்ப்பதற்கு கருங்கல்லை போன்று தோற்றம் இருந்தாலும் சில தருணங்களில் அந்தக் கல்லானது கரு நீலமாகவும், கரும் பச்சை வண்ணத்திலும் கூட காட்சிதரும். பல கோடி சூரியனின் சக்தியை உள்ளடக்கிய கல்லாக இது சித்தர்களால் கூறப்பட்டுள்ளது. இந்த பஞ்சநதன பாறையின் மற்றொரு சிறப்பை கேட்டால் எவராலும் நம்ப முடியாது. இந்தப் பாறையில் இறைவனின் திரு உருவத்தை எவராலும் உளியால் செதுக்க முடியாது என்றும், இறைவனின் திருவுருவம் தானாகவே உருவாகும் என்றும், வரலாற்றில் சொல்லப்பட்டிருக்கிறது. எந்த இடத்திலும் காணமுடியாத பஞ்சநதன கல்லில் உருவான சிலைதான் ஊட்டத்தூர் நடராஜர் என்பது குறிப்பிடத்தக்கது.


எனவே நவ லிங்க பூஜை எனப்படும், ஒன்பது விதமான பூஜைகள் அனைத்தும் நிறைவடைந்த பின்னரே, இந்தப் பாறையில் இருக்கும் நடராஜரின் உருவம் தெரியும், என்பதற்காக அபிஷேகம் நிறைவடைந்த பின்புதான் மனிதர்கள் பஞ்சநதன பாறையில் உருவாக்கப்பட்ட நடராஜரை தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வளவு சிறப்புமிக்க இத்திருத்தலத்தை ஒரு முறையாவது சென்று தரிசனம் செய்ய வேண்டும் என்று நம் மனதில் தோன்றுகிறது அல்லவா?

இந்த பஞ்சநதன கல்லால் உருவாக்கப்பட்ட நடராஜ பெருமானை உரிய பூஜைகளால் வழிபட்டால் சிறுநீரக கோளாறுகள் நீங்கும் என்பதும் இங்கு வரும் பக்தர்களின் நம்பிக்கையாக இருந்து வருகிறது. சிறுநீரக கோளாறால் பாதிக்கப்பட்டவர்கள் இத்திருத்தலத்திற்கு வந்து இங்கே கிடைக்கும் வெட்டிவேரை வாங்கி 48 துண்டுகளாக உடைத்து



மாலையாக கட்டி நடராஜப் பெருமானுக்கு அணிவிக்க வேண்டும். அடுத்ததாக அவருக்கு உண்டான அர்ச்சனைகளை முறையாக செய்து வழிபட்ட பின்பு, நாம் அணிவித்த அந்த வெட்டிவேர் மாலையை பிரசாதமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும். கோவிலில் இருக்கும் பிரம்ம தீர்த்த நீரை ஒரு கேனில் சேகரித்து வாங்கிக் கொள்ளலாம். இந்த தீர்த்தம் எத்தனை நாட்கள் ஆனாலும் கெட்டுப்போகாது என்பது குறிப்பிடத்தக்கது. வீட்டுக்கு சென்றதும் தினமும், நடராஜர் சிலையில் இருந்து பெறப்பட்ட வெட்டிவேர் மாலையில் இருந்து ஒரு துண்டை எடுத்து, அந்த தீர்த்தத்தில் போட்டு முதல் நாள் இரவே ஊற வைத்துவிட வேண்டும். மறுநாள் காலையில் அந்த தீர்த்தத்தை எடுத்து குடித்து விடலாம்.

இப்படி தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வர சிறுநீர் கோளாறு நீங்கும் என்பது இத்தளத்தின் பக்தர்களின் நம்பிக்கையாக கூறப்படுகிறது. பெண்கள் கட்டாயம் மாதவிலக்கு நாட்களில் இந்த நீரை பருக கூடாது. 48 நாட்கள் முடிந்ததும் மீதமுள்ள வெட்டிவேரை ஓடும் ஆற்றில் விட்டு விடலாம். பல பேர் இந்த பரிகாரத்தை செய்து சிறுநீர் கோளாறுகள் முழுமையாக நீங்கிய பின்பு திரும்பவும் இந்த ஆலயத்திற்கு வந்து சிவபெருமானை வழிபட்டு அபிஷேக அர்ச்சனை ஆராதனை செய்து நன்றி தெரிவித்து விட்டு சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



**தல வரலாறு:** பழங்கால வரலாற்று சிறப்பு மிக்க ஊட்டத்தூர் சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோவில் ராஜராஜ சோழ மன்னரால் கட்டப்பட்டது. முற்காலத்தில் ஊற்றத்தூர் என கல்வெட்டில் குறிக்கப்பட்ட இவ்வூர் தற்போது ஊட்டத்தூர் என்று அழைக்கப்படுகிறது. ஊட்டத்தூரின் மேற்கு திசையில் அமைந்திருக்கும் சோளேஸ்வரம் கோவிலுக்கு ராஜராஜ சோழன் அடிக்கடி வருகை தருவார். ஒருசமயம் மன்னரின் வருகைக்காக, பாதையை சரி செய்யும் சமயத்தில் மண்வெட்டியால் புல்லை வெட்டும் போது, ஒரு இடத்தில் இருந்து ரத்தம் பீரிட்டது. பயந்துபோன தொழிலாளிகள் இந்த செய்தியை மன்னனிடம் தெரிவித்தனர். அந்த இடத்தில் இருந்த சிவலிங்கத்தை கண்டுபிடித்து, செய்த பாவத்திற்காக மன்னிப்பும் கேட்டு, அந்த லிங்கத்திற்கு ஊட்டத்தூரில் ரத்தினேசுவரர் திருக்கோவிலை கட்டினார் ராஜராஜ சோழ மன்னர். இன்றும் இத்திருத்தலத்தில் வீட்டிலிருக்கும் லிங்கத்தின் நெற்றியில் வடு தென்படுவது குறிப்பிடத்தக்கது.

**இழந்த பதவி தரும் ஊட்டத்தூர் சிவன்**

ஆசிய கண்டத்திலேயே அபூர்வ நடராஜர் திருக்கோவில் இது. சிறுநீரகம் சம்மந்தமான கோளாறுகளை நீக்கக்கூடியவர். இந்திரன் பதவி இழந்தவுடன் இந்த நடராஜ பெருமானை தரிசித்து மீண்டும் இந்திர பதவியை பெற்றார். பதவியை இழந்தவர்கள் இந்த கோவிலுக்கு வந்து வழிபாடு செய்தால் மீண்டும் இழந்த பதவியை பெறலாம் என்பதை கல்வெட்டு செய்திகள் தெரிவிக்கிறது.

**பலன்கள்:** நம் உடலில் இருக்கும் எப்படிப்பட்ட நோயாக இருந்தாலும், அதை தீர்க்கும் சக்தி, இத்தலத்தில் வீற்றிருக்கும் பஞ்சநதன நடராஜர்க்கு உண்டு. திருமணத் தடை உள்ளவர்கள் இத்தலத்தில் பிரார்த்தனை செய்துகொள்ளலாம். இழந்த பதவியையும் மீட்பதற்கு சிவபெருமானை வழிபடலாம்.


**பலன் தரும் நவகிரகங்கள்**

கோவில் கொடி மரம் அருகே மேற்கூரையில் 12 ராசிகள், 27 நட்சத்திரங்கள் செதுக்கப்பட்டு அவை பூமியை நோக்கி பார்க்கும்படி உள்ளது இங்குள்ள மற்றொரு சிறப்பம்சம். அதன் அருகிலேயே 9 கிரகங்களும் வடிவமைக்கப்பட்டு உள்ளன. சிவன் கோவில்களில் நவக்கிரகங்கள் மற்றும் ராசிகளின் அதிபதிகள் தனித்தனி சன்னதியாக தான் இருக்கும். ஆனால் ஊட்டத்தூர் கோவிலில் இவை அனைத்தும் பூமியை நோக்கி இருப்பதால் அதன் அடியில் வைத்து செய்யப்படும் யாக பூஜைகள் அனைத்திற்கும் உடனடி பலன் கிடைக்கும். எந்த ராசியை சேர்ந்தவர்களும் இதன் மூலம் முழு பயன் அடைய முடியும்.

**பிரம்மா சாபம் பெற்ற தலம்**

பிரம்மாவுக்கு இந்த ஊரில்தான் சாப விமோசனம் கிடைத்தது. ஆதலால் சிவன் எதிரில் பிரம்ம தீர்த்தம் உள்ளது. உலகின் உள்ள அனைத்து






தீர்த்தங்களையும் பிரம்மா ஊட்டத்தூருக்கு கொண்டு வந்து பிரம்ம தீர்த்தத்தில் சேர்த்து உள்ளார். இதனால் இந்த பிரம்ம தீர்த்த நீரை எடுத்துச்சென்று நோயுற்றவர்களின் உடலில் தெளித்தால் அவர்கள் குணமடைவதாக கர்ண பரம்பரை கதைகள் கூறுகின்றன. இதற்கு சான்றாக ராஜராஜசோழன் உடல்நலம் இல்லாமல் இருந்தபோது ஊட்டத்தூர் வந்து பிரம்ம தீர்த்தத்தை உடலில் தெளித்து இறைவனை வழிபட்டு அடைந்து தனது ஆயுட்காலம் வரை நோய் நொடியின்றி வாழ்ந்தார் என்கிறது கதை. வேறு எந்த கோவிலிலும் சிவன் எதிரில் தீர்த்தம் கிடையாது.

**கால பைரவரின் சக்தி**

இந்த கோவிலில் உள்ள காலபைரவர் சக்திவாய்ந்த தெய்வமாவார். கால பைரவருக்கு 11 வாரங்கள் தொடர்ந்து சகஸ்ரநாம வழிபாடு செய்தால் சிறு குழந்தைகளின் மன பயம் நீங்குவதாகவும், மாடுகளுக்கு வியாதிகள் தீர்வதாகவும் ஐதீகம். அஷ்டமி திதியன்று கால பைரவருக்கு யாகம் நடத்தி, அபிஷேகங்கள், சந்தன காப்பு அலங்காரம் செய்து காலாஷ்ட மந்திரம் ஓதி வழிபாடு செய்தால் மரண பயம் நீங்குவதாகவும் கூறப்படுகிறது. இதனால் தீராத நோயினால் அவதிப்படுபவர்கள் இந்த சன்னதியில் சிறப்பு பூஜைகள் செய்து வழிபட்டு வருகிறார்கள்.

**செல்லும் வழி:**

சென்னையிலிருந்து திருச்சி நெடுஞ்சாலையில், திருச்சிக்கு முன்னதாக பாடலூர் என்ற இடத்தில் இருந்து சுமார் 4 கி.மீ தூரத்தில் இத்திருத்தலம் அமைந்துள்ளது.

**தரிசன நேரம்:**

*காலை 07.00 – 12.00, மாலை 04.00 – 08.00*

**முகவரி:**

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத
சுத்தரத்தினேஸ்வரர் திருக்கோயில்,
லால்குடி தாலுகா, பாடலூர் வழி,
ஊட்டத்தூர், திருச்சி – 621109.

– K.கலைமணி


வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
S D A
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance Available
Rs.12,999/-
Compo Offer
Rs.999/-
Rs.3699/-
Compo Offer
Rs.3999/-
Compo Offer
Compo Offer
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.

# இந்தியா கூட்டணியில் பிரதமர் வேட்பாளர் யார்? ஸ்டாலினால் சொல்ல முடியுமா?

# எடப்பாடி பழனிசாமி கேள்வி

எங்கு பார்த்தாலும் இந்தியா கூட்டணி.. இந்தியா கூட்டணி என்று பேசும் ஸ்டாலினால், இந்தியா கூட்டணியில் யார் பிரதமர் வேட்பாளர் என்று சொல்ல முடியுமா?, இந்தியா கூட்டணியிலேயே ஒற்றுமை இல்லை என்று எடப்பாடி பழனிசாமி கூறினார்.

நீலகிரி காரமடையில் அதிமுக வேட்பாளர் லொகேஷ் தமிழ்செல்வனை ஆதரித்து எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்தார். அப்போது அவர் கூறியதாவது:-

பொன்விழா கண்ட கட்சி அதிமுக. 30 ஆண்டுகாலம் ஆட்சி செய்த கட்சி அதிமுக. இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக தமிழ்நாடு இருப்பதற்கு அதிமுகவே காரணம். 30 ஆண்டு காலம் அதிமுக ஆட்சி செய்த காரணாமாகவே தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. ஆனால் ஸ்டாலின் அதிமுக ஆட்சியை இருண்ட காலம் என்கிறார். ஸ்டாலினின் 3 ஆண்டு கால ஆட்சி தான் மக்கள் விரோத ஆட்சி. இந்த 3 ஆண்டு கால ஆட்சியில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு விட்டது.

எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை நடக்காத நாளே இல்லை. செய்தி தாளை பார்த்தாலே தெரியும். இப்படிப்பட்ட ஆட்சியை நடத்தும் ஸ்டாலின் எங்க ஆட்சியை பார்த்து இருண்ட ஆட்சி என்கிறார். எங்களுடைய ஆட்சி சிறந்த ஆட்சி. 10 ஆண்டுகால ஆட்சி பொற்கால ஆட்சி என்று மக்கள் சொல்கிறார்கள். இப்போது தமிழ்நாட்டில்



எங்கு பார்த்தாலும், திமுக ஆட்சியை எப்போது வீட்டுக்கு அனுப்புவோம் என்ற குரலே ஒலித்துகொண்டு இருக்கிறது.

இன்றைக்கு திமுக அரசு பல்வேறு திட்டங்களை அறிவித்தது. இதில், நீட் தேர்வை ரத்து செய்வோம் .. ரத்து செய்வோம் என்று சொல்கிறது திமுக. ஆனால் திமுகவும் காங்கிரசும் சேர்ந்து தான் நீட்டை கொண்டு வந்தாங்க. அதை வேண்டாம் என்று போராடியது தான் அதிமுக. ஒரு பொய்யை பலமுறை சொன்னால் மக்கள் நம்பிவிடுவார்கள் என்று நினைக்கிறது திமுக. திமுகவின் பொய்யும் புரட்டும் இந்த தேர்தலில் எடுபடாது.

எல்லா துறையிலும் ஊழல்.. கட்டுப்படுத்த முடியவில்லை.. ஏனென்றால் அவர்களுடைய சகாக்களே லஞ்சம் வாங்கிக்கொண்டு இருக்கிறாங்க. பிறகு எப்படி கட்டுப்படுத்த முடியும். திமுக ஆட்சி அப்புறப்படுத்த வேண்டிய ஆட்சி. இப்போது விட்டுவிட்டீர்கள் என்றால்

பிறகு கட்டுப்படுத்த முடியாது. இன்றைக்கு வாரிசு அரசியல். கருணாநிதி அப்புறம் ஸ்டாலின். இப்போ உதயநிதி ஸ்டாலின். வாழை மரத்தின் கிளைக்கன்று போல வளர்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

இந்த தேர்தலில் போடும் ஓட்டு வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் இருக்க வேண்டும். என்ன தகுதி இருக்கிறது உதயநிதி ஸ்டாலினுக்கு. ஸ்டாலினுக்கே ஒரு தகுதியும் கிடையாது. பொம்மை முதல்வர். அவருடைய மகன் உதயநிதி ஸ்டாலின். உதயநிதி ஸ்டாலினுக்கு என்ன தகுதி இருக்கிறது. கருணாநிதி பேரன், ஸ்டாலினின் மகன் என்பதை தவிர.

ஏன் திமுகவில் வேற ஆளே இல்லயா?... மூத்த அமைச்சர்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது திமுக தலைவராக அறிவிக்கலாமே.. திமுகவே ஒரு குடும்பம் என்று சொல்கிறார் ஸ்டாலின். அப்போது, அந்த குடும்பத்தில் இருந்து யாரையாவது முதல்வராக அறிவிக்க வேண்டியது தானே.

எங்கு பார்த்தாலும் இந்தியா கூட்டணி.. இந்தியா கூட்டணி என்று சொல்கிறார். இந்தியா கூட்டணியில் யார் பிரதமர் என்று அவரால் சொல்ல முடியுமா இப்போது? இந்தியா கூட்டணியில் பல கட்சிகள் உள்ளதால் ஒற்றுமை இல்லை. அதிமுக பதவிக்கு ஆசைப்படவில்லை, அதிகாரம் தேவையெனில் பாஜகவுடன் கூட்டணி வைத்து இருப்போம்.

திமுக கட்சி கிடையாது. திமுக கார்பரேட் நிறுவனம். மக்கள் தங்கள் உரிமைக்காக போராடி வரும் நிலையில், முதல்வர் ஸ்டாலின் நீங்கள் நலமா என்று கேட்கிறார். கல்விக்கடன் ரத்து செய்தது அதிமுக. இதனை திமுக நிறுத்திவிட்டது. தாலிக்கு தங்கம் ஒரு பவுண் வழங்கினோம். இப்போது ஒரு பவுன் 50 ஆயிரம் ரூபாய். பல லட்சம் பெண்களுக்கு கொடுத்தோம். இந்த தாலிக்கு தங்கம் திட்டத்தையும் ரத்து செய்தது திமுக. ஒற்றை விரலால் ஓங்கி அடிப்போம்.. வாக்களிப்போம் இரட்டை இலைக்கு.. இவ்வாறு அவர் பேசினார்.

– P.கார்த்திகேயன்


# Prop serv

- ★ REGISTRATION
- ★ PATTA
- ★ GIRAMA NATHAM
- ★ CMDA APPROVAL
- ★ BUILDING PLAN
- ★ NAME TRANSFER
- ★ SETTLEMENT
- ★ LEGAL HEIR CERTIFICATE
- ★ CORPORATION TAXES
- ★ LAND CEILING
- ★ SLUM BOARD
- ★ HOUSING BOARD
- ★ PROPERTY IDENTIFICATION
- ★ DEMOLITION ORDER

Office: J133A, M.M.D.A Colony, Arumbakkam, Chennai - 600106.
Cell: 97896 98297 Email: advgsathiyanarayanan@gmail.com

# ஏன் வாக்களிக்க வேண்டும்?


18 வயதுக்கு மேற்பட்ட குடிமகனாக இருந்தால், இந்தியாவில் வாக்களிப்பது அரசியலமைப்புச் சட்டத்தின் உரிமை. இருப்பினும், இது விருப்பமாகவும் ஆக்குகிறது. நம் நாட்டை அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஆளப் போகிறவர்களைக் கண்ணை மூடிக்கொண்டு தேர்ந்தெடுப்பது எவ்வளவு தவறு என யோசித்திருக்கிறோமா? வாக்காளர்கள் ஒவ்வொருவரும் யோசிக்கவேண்டிய விஷயம் இது. தேர்தல் தொடர்பாக நம் மக்கள் கேட்க விரும்பும் சில முக்கியக் கேள்விகளையும் அதற்கான விளக்கத்தையும் பார்ப்போம்.

**நான் ஓட்டுப் போட்டுத்தான் ஒருத்தர் ஜெயிக்கப்போறாரா?**

கடந்த 2008ஆம் வருஷம் ராஜஸ்தான் மாநிலம் நத்வாரா எனும் சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தலில் சி.பி.ஜோஷி என்பவர் காங்கிரஸ் சார்பாக வேட்பாளராக நிறுத்தப் பட்டிருந்தார். வரும் ஆட்சிக்கான முதல்வர் அவர்தான் என்றும் காங்கிரஸ் சார்பாகப் பிரசாரம் செய்தார்கள். ஆனா, அந்தத் தேர்தலில் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் இவரை ஒரே ஒரு ஓட்டு வித்தியாசத்தில் ஜெயிச்சார்.

இதில் இன்னும் கொடுமையான விஷயம், சி.பி. ஜோஷியோட தாயார், அவரது மனைவி, அவரது கார் ஓட்டுநர் ஆகியோர் அன்றைக்கு ஓட்டுப் போடவில்லை. போட்டிருந்தால் ஜோஷி முதல்வராகியிருப்பார். இதே போல மத்தியப்பிரதேசம் தார் சட்டமன்றத் தொகுதியில் அதே 2008ஆம் வருஷம் நீனாவர்மா என்பவர் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் ஜெயிச்சிருக்கார். 2004ஆம் வருஷம் கர்நாடகாவின் சாந்தமாரஹள்ளி தொகுதியில் த்ருவனராயனா என்பவர் ஒரு ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கடந்த காலங்களில் பல தருணங்களில் மிகக் குறைந்த ஓட்டுகள் வேட்பாளரின் வெற்றியைத் தீர்மானித்திருக்கிறது. அதனால, உங்க ஒரு ஓட்டு



உங்க தொகுதியுடைய தலையெழுத்தையே மாற்றலாம்.

**அரசியலில் எல்லாருமே அயோக்கியர்கள் எனக் கருதினால் எனது ஓட்டினை எப்படிச் சரியாகப் பயன்படுத்துவது?**

உங்களுடைய தொகுதியில் நிற்கும் வேட்பாளர்களின் தரத்தை நிதானமா யோசித்துப் பாருங்க. அவங்க இதற்கு முன்னாடி மக்கள் பிரச்சனையில் முன் நின்று போராடியிருக்கிறார்களா, அணுகுவதற்கு எளிமையானவர்களா, நேர்மையானவர்களா, வெறும் பண பலத்தையும் கட்சி பலத்தையும் நம்பித் தேர்தலில் நிற்பவர்களா என்று செக்-லிஸ்ட் தயார் செய்து அதில் யார் உங்களுக்கு நம்பிக்கை தருகிறார்களோ அவர்களுக்கு உங்களின் அரிய, விலைமதிப்பில்லாத ஓட்டினைச் செலுத்துங்கள்.

சரி.. உங்கள் தொகுதியில் நிற்கும் எந்த வேட்பாளருமே உங்களுக்கு நம்பிக்கை தரும் அளவுக்கு இல்லையென்றால், வாக்கு இயந்திரத்தில் கடைசியாகக் கொடுக்கப்பட்டிருக்கும் NOTA (None of The Above) எனும் சின்னத்துக்கு உங்களோட ஓட்டினை அளிக்கலாம். இதன் மூலம் உங்களின் ஜனநாயகக் கடமையும், உங்கள்

விருப்பத்தையும் பதிவு செய்ததாக அமையும். நோட்டாவுக்கு வாக்கு அளிப்பது வீணானது என்று சில அரசியல் கட்சிகள் சொல்வார்கள்.

அது அவர்களின் சுயலாபத்துக்காகச் சொல்வது. உங்கள் தொகுதியில் நல்ல வேட்பாளர் யாருமே நிற்கவில்லை என நீங்கள் கருதினால் தயங்காமல் நோட்டாவைத் தேர்ந்தெடுங்கள். நாளடைவில் தேர்தலில் நல்லவர்களும் போட்டி-யிட இது ஒரு சிறுமுயற்சியாக அமையும்.

**பெரும்பாலான கட்சிகள் ஓட்டுக்குப் பணம்தரக்கூடும். நான் ஏன் கட்சிக்காரர்கள் தரும்பணத்தை வாங்கிக்கொண்டு ஓட்டுப் போடக்கூடாது?**

இது உங்களுடைய கௌரவத்தையும், நமது தேசத்தையும் அசிங்கப்படுத்தும் பாவச்செயல். அரசியல்வாதிகள், ஆட்சியைப் பிடித்துக் கொள்ளை அடிப்பதற்கு உங்களுக்குத் தரும் முன்பணம் போன்றது. பணத்தை வாங்கி ஓட்டுப் போடும் போதே நாம் அடுத்த ஐந்தாண்டுகளுக்கு அரசாங்கத்தைக் கேள்வி கேட்கும் உரிமையை இழந்து விடுகிறோம். அரசியல்வாதிகளும், “சும்மாவா ஓட்டு போட்டாங்க.. காச வாங்கிக்கிட்டுதானே ஓட்டு போட்டாங்க” என்று வெளிப்படையாகச் சொல்வதோடு நம்மையும் நமது நாட்டு வளத்தையும் கொள்ளையடிப்பார்கள். அதற்குச் சற்றும் இடம் கொடுக்கக்கூடாது.

அதுமட்டுமல்லாமல் ஒரு ஓட்டுக்கு வேட்பாளர் ரூ.1000 லஞ்சமாகக் கொடுப்பதைக் கணக்குப் பார்த்தால் ஒருநாளைக்கு ஐம்பது பைசாதான் வருகிறது. உங்களோட வாக்கின் மதிப்பு வெறும் ஐம்பது பைசா தானா? நமக்கு இலவசங்களைவிடத் தரமான கல்வி, சிறந்த மருத்துவம், நிலையான வாழ்வாதாரம் ஆகியவையே முக்கியம் என்பதை உணருங்கள். இவை தேர்தல் காலத்தில் நமக்குத் தரப்படும் லஞ்சப்பணத்தைவிடப் பல ஆயிரம் மடங்கு முக்கியமானவை.

இறுதியாக, அரசியல் ஒரு சாக்கடை. அதில் அயோக்கியர்கள், ஏமாற்றுபவர்கள் தான் தலைவராகிறார்கள் என்ற பொதுவான சமூகப் புரிதலை மாற்ற, உங்கள் ஓட்டு ஒரு வாய்ப்பு. இதனைச் சரியாகப் பயன்படுத்தாமல், பிறகு அரசாங்கம் சரியில்லை, அமைச்சர்கள் சரி-யில்லை என்று புலம்புவது கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் போன்றது.

ஆகவே, நிச்சயம் வாக்களியுங்கள் .உங்களின் வாக்கு அடுத்த ஐந்தாண்டு நம் ஒவ்வொருவரின் வாழ்வு, நமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கான பிரம்மாஸ்திரம் என்று உணருங்கள். நம்நாட்டின் எதிர்காலத்தை மனதில் கொண்டு சரியானவருக்கு உங்கள் வாக்கைச் செலுத்துங்கள். ஏப்ரல் 19, 2024 ஆம் நாளில் நீங்க எடுக்கப்போகும் முடிவு அடுத்த ஐந்தாண்டுகளுக்கான மக்களின் நல்வாழ்வுக்கு வழிவகுக்கும் என்பதை மனதில் கொள்ளுங்கள். இது நீங்கள் உங்களுக்காக மட்டுமல்ல வரும் உங்கள் சந்ததியினருக்கும் செய்யும் கடமை என்பதை மறவாதீர்கள்.

**வேட்பாளர்மதிப்பீட்டுப்படிவம்**

**கருத்து ஆம் / இல்லை**

1. வேட்பாளர் உள்ளூர் - தொகுதிக்குள் வசிப்பவர்
2. வேட்பாளர் அணுகுவதற்கு எளிதானவர்
3. கடந்தகாலங்களில் மக்களின் பிரச்சனைகளுக்காக போராடியவர்
4. நல்லஉடல் ஆரோக்கியத்துடன் இருப்பவர்
5. மதம் மற்றும் சாதி பாகுபாடுகள் பார்க்காத நடுநிலையாளர்
6. தேசத்தின் சமகாலப் பிரச்சனைகள் குறித்துத் தெளிவான புரிதல் உடையவர்
7. தனது கருத்தை தெளிவாக எடுத்துக்கூறும் பேச்சுத்திறனும், எழுத்தாற்றலும் உடையவர்
8. வாக்கு சேகரிக்கப் பணமோ, பொருளோ அளிக்காதவர்
9. வேட்பாளர் குற்றப்பின்னணியோ குற்றவழக்குகளோ எதுவும் இல்லாதவர்
10. தனது சட்டமன்றத் தொகுதியின் பகுதிகள், உள்ளூர் கலாச்சாரம் ஆகியன பற்றி நன்கு அறிந்தவர்

**குறிப்பு:** இந்தப் பட்டியலில் 8க்கு மேல் ஆம் பெற்ற வேட்பாளர்களே சிறந்த வேட்பாளர்களாகக் கருத முடியும். அனைத்துத் தகுதிகளும் சமமாக இருக்கும் பட்சத்தில் பெண் வேட்பாளர், இளைஞர், முன்கூட்டிய பொதுச் சேவையில் ஈடுபட்ட வேட்பாளர் ஆகியோருக்கு முன்னுரிமை கொடுக்கலாம்.

– **நா.வீ.சிவசங்கர்**



# தமிழகத்திற்கு பிரதமர் வருவதால் திமுகவுக்கு ஏன் பயம்?

## அண்ணாமலை காட்டம்

திமுகவுக்கு ஆதரவாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தீவிரமாக பிரசாரம் மேற்கொண்டிருக்கும் நிலையில், அவரை மனநல மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதிக்க வேண்டும்“ என பாஜக திமுகவுக்கு ஆதரவாக மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் தீவிரமாக பிரசாரம் மேற்கொண்டிருக்கும் நிலையில், அவரை மனநல மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதிக்க வேண்டும்“ என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை பேசியிருப்பது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் அனைத்து தொகுதிகளுக்கும் ஏப்ரல் 19ம் தேதி ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. எனவே பரப்புரைகள் சூடுபிடித்து வருகின்றன. பாஜகவை பொறுத்த அளவில், 19 இடங்களிலும், பாமக 10, தமாகா 3, அமமுக 2, ஓபிஎஸ், தேவநாதன், ஜான்பாண்டியன், பாரிவேந்தர், ஏ.சி.சண்முகம் ஆகியோர் தலா ஒரு இடங்களிலும் போட்டியிடுகின்றனர். இதில் ஓபிஎஸ் தனி சின்னத்திலும், தேவநாதன், ஜான் பாண்டியன், பாரிவேந்தர், ஏ.சி.சண்முகம் ஆகியோர் தாமரை சின்னத்திலும் போட்டியிடுகின்றனர்.

அதேபோல திமுக 21 தொகுதிகளில் நேரடியாக களம் காண்கிறது. கடந்த சட்டமன்ற தேர்தலில் தனித்து களம் இறங்கிய கமல்ஹாசனின் மக்கள் நீதி மய்யம், இந்த முறை திமுக கூட்டணியில் இணைந்திருக்கிறது. எனவே, கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களுக்காக கமல்ஹாசன் தீவிரமாக பரப்புரையை மேற்கொண்டிருக்கிறார். வடசென்னையில் பரப்புரையில் ஈடுபட்டிருந்த அவர், இந்தியாவின் தலைநகர், ஆர்எஸ்எஸ் தலைமை அலுவலகம் அமைந்திருக்கும் நாக்பூருக்கு மாற்றப்படும் என்று அச்சம் தெரிவித்திருந்தார்.

இது குறித்து கோவை லோக்சபா தொகுதி வேட்பாளரும், பாஜக மாநில தலைவருமான அண்ணாமலையிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது அவர், “கமல்ஹாசனை மனநல மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதிக்க வேண்டும்“ என்று கூறியுள்ளார்.

அதாவது, “இந்தியாவின் தலைநகரை எப்படி நாக்பூருக்கு மாற்ற முடியும்? இப்படி கூறிய கமல்ஹாசனை மனநல மருத்துவமனையில் அனுமதித்து அவரது மூளையை பரிசோதிக்க வேண்டும். அவர் உண்மையில் நன்றாகத்தான் இருக்கிறாரா? அவரது இடது, வலது மூளை சரியாக செயல்படுகிறதா? சுயநினைவோடுதான் இருக்கிறாரா? சரியாக சாப்பிடுகிறாரா? என பரிசோதிக்க வேண்டும். அவர் மட்டுமல்ல இப்படி கூறுபவர்கள் அனைவரையும் பரிசோதிக்க வேண்டும்.

அவர் உண்மையாகவே ஆரோக்கியமான கருத்துக்களைதான் பேசுகிறாரா? அல்லது ஒரு ராஜ்யசபா சீட்டுக்காக தனது கட்சியை திமுகவிடம் அடகு வைத்துவிட்டு இப்படி கூவுகிறாரா என்பதை அவர்தான் விளக்க வேண்டும்“ என்று கூறியுள்ளார்.

தொடர்ந்து பேசிய அவர், பிரதமர் மணிப்பூருக்கு போகாமல் தமிழகத்திற்கு அடிக்கடி வருகிறாரே என முதலமைச்சர் விமர்சித்துள்ளாரே? என செய்தியாளர் எழுப்பிய கேள்விக்கு, “ஏன் திமுக கதறுகிறார்கள். தன்னுடைய நாட்டில் உள்ள தமிழகத்திற்கு பிரதமர் வருகிறார். இதனால் திமுகவுக்கு ஏன் பயம்? இதே முதலமைச்சர் கையில் கிளவுஸ் போட்டுக்கொண்டு காரில் வந்து, மாவட்ட தலைநகரில் தங்கி பேசுகிறாரே, ஏன் முதலமைச்சர் கிராமங்களுக்கு செல்லவில்லை?

இதுவரை எத்தனை கிராமங்களுக்கு அவர் சென்றிருக்கிறார்? முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எத்தனை கிராமங்களில் அவர் இரவு தங்கியிருக்கிறார்?” எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். அண்ணாமலையின் இந்த கருத்துக்கள் அரசியல் தளத்தில் பெரும் விவாதங்களை கிளப்பியிருக்கிறது.

– K.சுபுலட்சுமி



# தகிக்கும் வெப்பம்

நாடு முழுவதும் கோடைக்காலம் தொடங்கி விட்ட நிலையில், வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல இடங்களில் வெப்ப அலை வீசும் என்று இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளதை தொடர்ந்து வெப்பம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஒடிசா, மேற்கு வங்கம், ஆந்திரா மற்றும் தமிழகத்தின் சில பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 7 டிகிரி செல்சியஸ் வரை அதிகரித்து உள்ளது. அதேபோல் நாடு முழுவதும் பல மாநிலங்களில் வெப்ப அலை வீசும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. தில்லி, வடகிழக்கு மாநிலங்கள், ஒடிசாவிலும் கடும் வெயில் இருக்கும் என இந்திய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

அனந்தபூரில் 43.5 டிகிரி செல்சியஸாகவும், ஆந்திராவின் கர்னூலில் 43.2 டிகிரி செல்சியஸாகவும், சேலத்தில் 42.3 டிகிரி செல்சியஸாகவும், ஈரோட்டில் 42 டிகிரி செல்சியஸாகவும் வெப்பநிலை பதிவாகியுள்ளது. இதற்கிடையில், ஏப்ரல் 15 முதல் ஒடிசாவிலும், ஏப்ரல் 17 முதல் மேற்கு வங்கத்திலும் வெப்ப அலை நிலவி வந்ததாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த ஐந்து நாட்களில் மேற்கு வங்காளம், கர்நாடகா, ஒடிசா, தமிழ்நாடு, பீகார், சிக்கிம், தெலுங்கானா, உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களில் வெப்ப அலையானது கடுமையாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 25 முதல் 27 தேதிகளில் ஒடிசாவில் இரவு நேர வெப்பநிலையானது இயல்பை விட அதிகமாகவே இருக்க வாய்ப்புள்ளது. அதிக இரவு வெப்பநிலையானது மிகவும் ஆபத்தானதாகக் கருதப்படுகிறது, ஏனெனில் உடல் குளிர்ச்சியடைய வாய்ப்பு கிடைக்காது.

கடலோர ஆந்திரா, தமிழ்நாடு, புதுச்சேரி, கர்நாடகா, கோவா, கேரளா, அசாம், மேகாலயா, திரிபுரா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் அதிக ஈரப்பதம் இருப்பதால் மக்களின் சிரமம் மேலும் அதிகரிக்கும்.

ஏப்ரல் மாதத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெப்ப அலையானது 4 முதல் 8 நாட்கள் வரை எதிர்பார்க்கப்படுவதாக வானிலை அலுவலகம் தெரிவித்துள்ளது. அதே நேரத்தில் ஏப்ரல் முதல் ஜூன் வரையான காலகட்டத்தில் சராசரியாக 4 முதல் 8 நாட்கள் வரையிலான வெப்ப அலையானது 10 முதல் 20 நாட்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

– ட.பிரகாசம்

ஐந்தறிவு குழந்தைகளை பாதுகாப்போம்! அன்புடன் அவற்றை பராமரிப்போம்!!

# ANIMAL CARE TRUST

Regd.

## அனிமல் கேர் டிரஸ்ட்



# 759, TH Road, New Washermenpet, Chennai - 600081.

Contact: **9003150947, 8925270027**

Email: animalcaretrust247@gmail.com

**தன்னுயிர் போல் பிற உயிர்களையும் எண்ணிக் கருணை கொண்டு அவை துன்பமுறும்போது, தம் துன்பம்போல் கருதி இடர்நீக்க முற்படுவதே மனிதன் தாம் பெற்ற அறிவின் இயல்பு!**





- சென்னை புது வண்ணாரப்பேட்டையில் ANIMAL CARE TRUST என்கிற பெயரில் பிராணிகள் பராமரிப்பு அறக்கட்டளையை நிறுவி அதன் சார்பாக பிராணிகள் காப்பகத்தை நடத்தி வருபவர் கலா குபேந்திரன்.
- விபத்தில் அடிபட்டு மற்றும் நோய்வாய்ப்பட்டு அவதியுறும் 200-க்கும் மேற்பட்ட நாய்கள், பூனைகளுக்கு உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்து அடைக்கலம் கொடுத்து, அக்கறையுடன் பராமரித்து அவற்றின் வாழ்நாளை நீட்டித்து வருகின்றார்.
- இதோடு மட்டும் அல்லாமல் சாலைகளில் உயிரிழக்கும் நூற்றுக்கணக்கான நாய் மற்றும் பூனைக்குட்டிகளை வாஞ்சையோடு அள்ளி அவற்றை இடுகாட்டிற்கு கொண்டு சென்று நல்லடக்கமும் செய்து வருகின்றார்.
- தினமும் உணவு சமைத்து, ஆட்டோவில் எடுத்துச் சென்று சுற்றுவட்டாரங்களில் உள்ள 200-க்கும் மேற்பட்ட நாய், பூனைகளுக்கு உணவளித்து வருகின்றனர்.
- கலா குபேந்திரனைப் பற்றி கேள்விப்பட்ட TV சேனல்கள், Youtube சேனல்கள் இவரது பிராணிகள் காப்பகத்தை படம்பிடித்து ஒளிபரப்பு செய்ய ஆரம்பித்தனர். இவரது சிரமத்தையும், தேவைகளையும் தெரிந்து கொண்ட இளம்பரிதி-ஜீவா தம்பதியினர் தற்காலிகமாக ஒரு பழைய கட்டிடத்துடன் கூடிய திறந்தவெளி இடத்தை ஏற்பாடு செய்து தந்துள்ளனர்.
- நோய் மற்றும் விபத்து ஏற்படும் நேரத்தில் மருத்துவமனை கட்டணம், மருந்து, மாத்திரை, போக்குவரத்து என செலவினங்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.
- 200-க்கும் மேற்பட்ட நாய்கள் மற்றும் பூனைகள், தினந்தோறும் காப்பகத்திற்கு வந்துசேரும் புதிய பிராணிகள் என எண்ணிக்கை கூடிக்கொண்டே போவதால் மாதாந்திர செலவு அதிகரித்து வருவதோடு தற்போது இருக்கும் தற்காலிக இடமும் போதாத சூழ்நிலையில், கலா குபேந்திரனுக்கு ஒரு நிரந்தர இடம் தேவைப்படுகிறது.
- எனவே, மேற்கண்ட செலவுகளுக்கு ஐந்தறிவு ஜீவன்கள் மீது அக்கறையும், ஆத்மார்த்தமான அன்பும் கொண்ட மனித தெய்வங்களான உங்களால் முடிந்த உதவியை செய்ய வேண்டுகிறோம்.
- தற்போது கிடைத்துவரும் உதவிகள் போதாத நிலையில், மேலும் உதவிகள் கிடைக்க உங்களை எதிபார்த்து நாடியுள்ளார் கலா குபேந்திரன்.

**Account details:**

**BANK OF BARODA**
**Beneficiary : Animal Care Trust**
**IFSC Code : BARBOTIRUVA**
**Account number: 06780100016005**

Scan to Donate

**காலம் காலமாய் மனிதனோடே பயணித்து, மனிதனை மட்டுமே நம்பி உயிர் வாழ்ந்து வரும் நாய் மற்றும் பூனைகளை காப்பாற்றி பேணி பாதுகாக்க நீங்கள் செய்யும் உதவி, அவைகளின் பசியை போக்குவதோடு நீண்ட நாட்கள் நிம்மதியாக வாழ வழிவகை செய்யும்!**


தேர்தல் 19-04-2024
வாக்களிப்பது நம் கடமை!
100%
வாக்களிப்போம்!
இந்தியர்களின் பெருமை

**PENA KURAL,** Tamil Monthly - April 2024
Registrar of Newspapers for India - Registered No.: **TNTAM/2022/85375**

Owned, Printed and Published by: **NV SIVASHANKAR**

Printed at: **J.M.PROCESS, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002.**

Published at: **No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078.**

Editor: **RATHIKA S**